# இலக்கு

இதழ் 93

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஆகஸ்ட் 30, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1




வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினம்



## வரலாற்று புகழ்மிக்க திருமங்களாய் சிவன் கோவிலை நோக்கிய ஒரு பயணம்

மட்டுநகர் *திவா*



## நடந்ததும், நடப்பதும், நடக்க வேண்டியதும்

*அன்பன்*



## செங்கொடியின் நினைவும் ஏழுதமிழர் விடுதலையும்

*கவிபாஸ்கர்*



பகுதி 02

## 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' மாலியில் பிரான்சு முன்னெடுத்துள்ள நவகாலனீய நடவடிக்கை

தமிழில் *ஜெயந்திரன்*



## தமிழ் மக்களின் ஜனநாயகப் போராட்டங்களை அழிப்பதற்காக உருவாக்கப்படும் ஆயுதக் குழுக்கள்

மட்டுரோன்

# சர்வஜன வாக்கெடுப்பை நடத்த இதுவே சரியான தருணம்- விக்னேஸ்வரன்

“தமிழ் மக்கள் அரசியல் இலக்குகளில் ஆர்வத்தை இழந்து விட்டார்கள் என்றும், பொருளாதார சலுகைகளையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றும், தேர்தல் முடிவடைந்த பின்னர் அரசாங்க உறுப்பினர்கள் தெரிவித்துவரும் கருத்துக்கள் உண்மையானால், வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பது தொடர்பில் சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையின்கீழ் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை வடக்கு கிழக்கு மக்கள் மத்தியில் நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு இதுதான் சரியான சந்தர்ப்பம்” என்று கடந்த வெள்ளிக்கிழமை (28) சிறீலங்கா நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.



ஒற்றை ஆட்சியின் கீழ் பொருளாதார நலன்கள் மட்டுமே அவர்களுக்கு வேண்டும் என்று மக்கள் தீர்மானித்தால், நான் அரசியலில் இருந்து உடனே விலகி விடுவேன். இல்லையென்றால், எமது தலைவர்கள் புதிதாகச் சிந்தித்து அரசியல் மேதகைப் பண்புகளுக்குரிய முடிவுகளை எடுத்து எமது இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். ஆகவே, எமக்கான அதிகாரத்தையும் அங்கீகாரத்தையும் தாருங்கள். நாம் ஏனையோருடன் இணைந்து இந்த நாட்டை அமைதியும் செழிப்பும் மிக்கதாக ஆக்குவோம். யுத்தத்தை வெல்வது இலகுவானது. ஆனால், சமாதானத்தை வெல்வது கடினமானது. சமாதானமே நிரந்தரமான வெற்றியை ஏற்படுத்தவல்லது. இந்தப் புரிதலே அசோக மன்னன் பௌத்தத்தை தழுவக் காரணமானது.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்றும், பொருளாதார பிரச்சினை மட்டுமே இருக்கின்றது என்றும் கூறி வரும் உங்களில் சிலரின் விதண்டாவாதத்தை தயவு செய்து விட்டுவிடுங்கள். சுதந்திரத்துக்கு பின்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு கட்சிகளுமே இனப் பிரச்னை இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொண்டே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டன. சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டன. யுத்த நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நீண்டகால இன முரண்பாட்டின் ஒரு இடைவெளிப்பாடாகவே விடுதலைப்புலிகள் தோன்றினார்கள். இன்று விடுதலைப்புலிகள் இல்லை என்ற காரணத்துக்காக இனப்பிரச்சினை இல்லை என்று ஆகிவிடாது. ஏன அவர் தனது உரையில் மேலும்தெரிவித்துள்ளார்.

# இந்தியாவே சிறிலங்கா அரசியலை அடிக்கடி மாற்றியது

## கொலம்பகே



முன்னர் ரணில் அரசை ஆதரித்த இந்தியா, பின்னர் கோத்தபாயவை ஆதரித்தது. பூகோள அரசியல் நெருக்கடிகளால் இந்தியா தனது முடிவை அடிக்கடி மாற்றயதாக சிறீலங்காவின் புதிய வெளிவிவகார அமைச்சரும், முன்னாள் கடற்படை தளபதியுமான அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மகிந்த ராஜபக்ச அரசு சீனாவின் பக்கம் செல்லும் நிலைகண்டு பதறிய இந்தியா, 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை கொண்டுவந்தது. ஆனால் புதிய அரசு அம்பாந்தோட்டை துறை முகத்தை 99 வருடங்களுக்கு சீனாவுக்கு வழங்கியதை தொடர்ந்து இந்தியா மீண்டும் கோத்தபாயாவை ஆதரித்தது.

சிறீலங்காவின் முடிவு தவறானது என இந்தியா, அமெரிக்கா, யப்பான் ஆகிய நாடுகள் கருதின. தற்போது இந்தியாவுக்கும் கோத்தபாயாவுக்கும் இடையில் நல்ல உறவு உள்ளது.

மேற்குலகத்தின் நகர்வுகளுக்குள் சிக்காது ஆசியக் கண்டம் மீது நாம் அக்கறை செலுத்துவள்ளோம். பங்களாதேசம் ஒரு தூங்கும் புலி, அதன் பொருளாதார வளர்ச்சி அதிகமாகி வருகின்றது. நாம் அதனுடன் நல்ல உறவுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். எனவே முக்கிய நாடுகளுக்கு நல்ல இராஜதந்திரிகளை தூதுவர்களாக நியமிக்க வேண்டும்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# சிறீலங்காவில் இயங்கும் சீன நிறுவனங்கள் மீதும் அமெரிக்கா தடை

சீனாவில் உள்ள 24 நிறுவனங்கள் மீது அமெரிக்கா தனது தடையை அறிவித்துள்ளது. இந்த நிறுவனங்களில் கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள சீனாவின் நிறுவனங்களும் அடங்கும்.

தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள் நிர்மாணிக்கும் துறைமுகங்கள் மற்றும் வானூர்தி நிலையங்கள் ஊடாக பொருட்களை அமெரிக்க நிறுவனங்கள் ஏற்றுமதி செய்வதற்கு அந்த அரசின் அனுமதியை பெறவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம், மாத்தளை விமான நிலையம் போன்றவற்றை நிர்மாணித்த நிறுவனங்கள் மீதும் தடை கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆனால் இது இரு நாடுகளின் இறைமை தொடர்பான விடயம். அதில் அமெரிக்கா தலையிட முடியாது என சீனா தெரிவித்துள்ளது.

# சிறீலங்காவின் வருமானம் வட்டி கட்டவே போதுமானது

## சம்பிக்க

தற்போதைய புதிய அரசின் பொருளாதார கொள்கையில் கிடைக்கும் வருமானம் சிறீலங்கா அரசு வாங்கிய கடன்களுக்கான வட்டியை கட்டுவதற்கே போதுமானது என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க கடந்த வியாழக்கிழமை (27) சிறீலங்கா நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இடைக்கால நிதி அறிக்கை விவாதத்தில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவின் வரலாற்றில் இது தான் முதல் தடவை வட்டிப் பணம் வருமானத்திற்கு இணையாக உயர்ந்தது. இந்த நிலைமையானது அரச பணியாளர்களின் சம்பளத்தை கூட வழங்க முடியாத நிலையை ஏற்படுத்தலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வருடாந்த பொங்கல் விழாவை முன்னிட்டு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிரமதானம்

வவுனியா வடக்கு ஒலுமடு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த பொங்கல் நிகழ்வை முன்னிட்டு ஆலயத்தை துய்மைப்படுத்தும் பணிகளில் மக்களுடன் இணைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் பங்கு பற்றியிருந்தனர்.



நேற்று (29) மேற்கொள்ளப்பட்ட இந்த சிரமதானப் பணிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் பங்குபற்றியிருந்தார். இந்த நிகழ்வில் பொதுமக்கள், இளைஞர்கள் ஆகியோர் அதிக அளவில் பங்குபற்றியிருந்தனர். குறித்த ஆலயத்தின் வழிபாட்டையும், புனரமைப்பு பணிகளையும் தடைசெய்யக் கோரி தொல்லியல் திணைக்களத்தினாலும் நெடுங்கேணி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# கோவிட்-19 - இறந்தவர்களின் எண்ணிக்கை 842,207



கொரோனா வைரசின் தாக்கத்திற்கு இதுவரையில் உலகில் 842,207 பேர் லியாகியுள்ளதுடன், 24,955,939 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் 17,338,626 பேர் குணமடைந்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் 185,986 பேர் பலியாகியுள்ளதுடன், 60 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரேசிலில் 119,594 பேரும், இந்தியாவில் 62,837 பேரும், மெக்சிகோவில் 63,146 பேரும், பிரித்தானியாவில் 41,486 பேரும், இத்தாலியில் 35,472 பேரும், பிரான்சில் 30,596 பேரும், ஸ்பெயினில் 29,011 பேரும், பெருவில் 28,471 பேரும், ரஸ்யாவில் 17,025 பேரும், கனடாவில் 9,108 பேரும் பலியாகியுள்ளனர்.

# மக்கள் பிரதிநிதிகளும் தொகுதி ரீதியான பொதுவேலைத் திட்ட பகிர்வும்

**பனையூரான்**



தேர்தல் முடிவடைந்து 3 வாரம் கடந்து விட்டது. மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து புரட்சிகர உரைகளை ஆற்றத் தொடங்கி விட்டனர். இந்த தருணம் யுத்தம் தின்ற தேசத்தின் குடிமகனாக அன்புக்குரிய எம் தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கும் கட்சித் தலைமைகளுக்கும் இம் மடலை வரைகின்றேன்.

வட –கிழக்கு, மலையகம் - மேலகத்திலிருந்து 26 பிரதிநிதிகள் தமிழ் மக்கள் சார்பாக கடந்த தேர்தலில் நாடாளுமன்றம் சென்றிருக்கின்றார்கள். அநேகர் தமிழ் பிராந்திய கட்சிகளையும், ஓரிருவர் தேசிய கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி தெரிவாகியுள்ளனர். எது எவ்வாறு இருப்பினும், இவர்கள் அனைவரும் தாம் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் அனைத்து தொகுதி வாக்காளர்களின் வாக்கையும் பெற்றிருக்கின்ற போதிலும், சமச்சீராக அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய பொறிமுறையை கொண்டிருக்க வேண்டியது அத்தியாவசியமானது.

அதற்கு ஒவ்வொரு கட்சித்தலைமையும் தகுந்த தொழிற்பங்கீட்டை கட்சியில் போட்டியிட்டு வென்ற / தோற்ற சகல வேட்பாளர்களையும் ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். உதாரணத்திற்கு யாழ். மாவட்டத்தில் ஊர்காவற்றுறை (தீவகம்), வட்டுக்கோட்டை (வலி மேற்கு) காரைநகர், மானிப்பாய் (வலி தென் மேற்கு), உடுவில்(வலி தெற்கு), காங்கேசன்துறை (வலி வடக்கு), நல்லூர், யாழ்ப்பாணம், உடுப்பிட்டி (வடமராட்சி), சாவகச்சேரி (தென்மராட்சி), கிளிநொச்சி தேர்தல் தொகுதி களிலும், வன்னி மாவட்டத்தின் முல்லைதீவு, வவுனியா, மன்னார் தேர்தல் தொகுதிகளையும் முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்தி வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருக்கவில்லை..

ஆதலால் ஒவ்வொரு கட்சியும் வெற்றி பெறாத, தங்கள் வேட்பாளர்களை அல்லது அவர்கள் ஈடுபாடு காட்டாதபோது புதியவர்களை ஒவ்வொரு தொகுதிக்கும் நியமிக்க வேண்டும்.

அவர்களினூடாக அந்த தொகுதியில் காணப்படும் மக்கள் பிரச்சினைகள், நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்றிட்டங்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் சேவைகளை முழுமையாக மக்களை சென்றடைய வகுக்க வேண்டிய உத்திகள், அழுத்தங்கள் என்பவற்றை செயற்படுத்த முடியும்.

வெற்றி பெற்ற உறுப்பினர்கள் நிதிமூலங்களை பங்கீட்டு முன்னுரிமை தேவையில் ஒதுக்கவும், பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்க்கவும் வினைத்திறனான பொறிமுறை இதன் மூலம் உருவாகும்.

அதே போன்ற ஒவ்வொரு கட்சியும் பல்வேறுபட்ட நிபுணர்களை உள்ளடக்கிய ஆலோசனைகளை, துறை சார்ந்த விடயங்களை கையாளுவதற்கும், எதிர்கால திட்டமிடலுக்கும் வைத்திருத்தல் அவசியமாகும்.

அதே நேரம் பொதுப் பிரச்சனையான இனப் பிரச்சனையில் வட -கிழக்கு கட்சிகளும், தோட்ட தொழிலாளர் பிரச்சனையில் மலையக கட்சிகளும் பிராந்திய ரீதியாக பொது இணக்கப்பாட்டையும் தமிழ் அடையாளம் இருப்பு என்ற ரீதியில் பொது வேலைத் திட்டத்தையும் பற்றி ஆழமான புரிதலுடன் இயங்குவது பற்றி சிந்திப்பது காலத்தின் இன்னுமொரு முக்கிய தேவையாகும்.

இவை தொடர்பாக ஏதாவது ஓர் புள்ளியில் சில தமிழ் அரசியல் கட்சிகளாவது பணியை ஆரம்பிக்க வேண்டும் என்பதே வேணாவாகும்

தமிழ் ஊடகங்களும், செயற்பாட்டாளர்களும் தொடர்ந்து பயனுறுதி வாய்ந்த செல்வாக்கை இவை தொடர்பில் பொறுப்புக்கூறல், வெளிப்படைத் தன்மையுடன் இயங்குதல் ஆகிய மக்களாட்சியின் முக்கிய கரிசனைகளினூடாக மேற்கொள்ள வேண்டும் என்பதும் பாமர பொது சனத்தின் நியாயமான எதிர்பார்ப்பாகும்.

# அரசு தனிவழி. ஈழத்தமிழர் எவ்வழி

சிறீலங்காவில், சிறீலங்காப் பொதுஜன பெரமுனவிற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்ததை அடுத்து, அரசு சிங்கள பௌத்த பேரினவாதத்தையே இலங்கைத் தீவின் ஆட்சியாக மாற்றும் தனிவழிப் பயணத்தை அனைத்துலக நாடுகளுக்கோ அமைப்புக்களுக்கோ எவ்வித அச்சமுமின்றித் தொடங்கி விட்டது. 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று வெளிப்படையாக அரசை நடுநிலையற்றதாக்கும் பிரகடனத்தைச் செய்தும் விட்டது.

இந்த 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்ற பிரகடனம் பொதுவாக சட்டத்தின் ஆட்சியில் சுதந்திரமான நிர்வாகம், சமத்துவமான சட்ட அமுலாக்கம் என்பன உள்ள நிலையில் தான் சட்டப் பாதுகாப்பை அனைவருக்கும் ஏற்படுத்தி வளர்ச்சிகளை வேகப்படுத்தும். ஆனால் சிறீலங்கா தமிழ் இன அழிப்பினை நடாத்திய நாடாக மட்டும் அல்லாது இன்றும் பெரும்பான்மை மக்களுக்கு எதிராக ஈழத்தமிழர்களுக்கு அரசியல் அதிகாரப் பகிர்வு என்ற பேச்சுக்கே இடமில்லையெனவும், உலகெல்லாம் நன்கு அறியப்பட்ட இனப் பிரச்சினையையே இல்லையெனவும் கூறும் நிலையில், இப்பிரகடனம் நேரடியாக ஈழத் தமிழர்களின் மனித உரிமைகளுக்கு விடுக்கப்பட்டுள்ள சிறீலங்கா அரசின் அச்சுறுத்தலாகவே அமைகிறது.

எவ்வாறு இப்பிரகடனம் ஈழத்தமிழர்களின் மனித உரிமைகளுக்கு எதிரானதாகிறது?

*01.* வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக பிரித்தானிய காலனித்துவ காலம் வரை இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுவதையும் ஒரே மக்களினத்தின் தேசமாகத் தனியரசு, சிற்றரசு முறைகள் வழி தங்கள் தாயகமாக கொண்டிருந்த ஈழத் தமிழ்த் தேச இனத்தின் தாயக உரிமையாம் இறைமையின் தொன்மையையும் தொடர்ச்சியையும் மறுக்கிறது

*02.* ஈழத்தமிழ் மக்களின் தேசிய தன்னாட்சி உரிமைகளை அடக்கி ஆளுகிறது

*03.* ஈழத்தமிழர்களுக்கு சிறீலங்காவின் அரசியலமைப்பில் பெயரளவில் உள்ள உரிமைகளும் கூட இல்லாத அரசியலமைப்பை உருவாக்க வழிகாட்டுகிறது.

*04.* ஈழத்தமிழர்களைத் தேச இனம் என்னும் அவர்களின் இயல்பு நிலையில் நின்று பௌத்த சிங்கள நாட்டில் வாழும் ஒரு சமூகத்தினர் என்னும் உண்மைக்கும், இயற்கைக்கும் மாறான ஒரு புதிய நிலைக்குத் தள்ளி, அடிமைப்படுத்தி இரண்டாந்தரக் குடிகளாக்குகிறது.

*06.* இலங்கைத் தீவின் 'இறைமையுள்ள மக்கள்' என்ற அடிப்படையில் தம்மைப் பாதுகாக்குமாறும் தமக்கான அமைதியையும், வளர்ச்சிகளையும் உறுதிப்படுத்துமாறும், உலக நாடுகளிடமும், உலக அமைப்புக்களிடமும், அனைத்துலகச் சட்டத்தின் கீழ் கோருவதற்குள்ள ஈழத்தமிழர்களின் வெளியக சுயநிர்ணய உரிமையினை இல்லாமலாக்குகிறது

*07.* ஈழத்தமிழ் மக்களை தேச இனம் அல்ல; சமூகம் என்ற நிலைக்கு மாற்றுவதன் மூலம் புலம்பெயர் ஈழத்தமிழர்களால், அனைத்துலக சட்டங்களுக்கு ஏற்ப, ஈழத்தமிழர்களை இனஅழிப்பில் நின்று பாதுகாக்குமாறும், அதீத மனிதாய தேவைகளில் உள்ள அவர்களுக்கு சிறீலங்காவின் இறைமையை மீறி மனிதாய உதவிகளைச் செய்யுமாறும் கேட்பதற்குரிய அனைத்துலக சட்ட உரிமைகளை இல்லாததாக்கி ஈழத்தமிழர்களைத் தனிமைப்படுத்தி அடக்கி ஆளுதலை இலகுபடுத்துகிறது.

தமக்குக் கிடைத்துள்ள பாராளுமன்ற அறுதிப் பெரும்பான்மையாலும், தங்களுக்கு எதிராக மக்கள் எழாதவாறு படையினரையே கொண்டு தங்கள் நிர்வாகத்தை நிறுவி விட்டதாலும், உலக அரசுக்கள் உலக அமைப்புக்கள் தங்களை பலமான அரசாக *(Strong state)* கருதும் என சிறீலங்கா நம்புகிறது. இதனால் உலக நாடுகள், உலக அரசியலில், இலங்கைத் தீவின் இந்துமா கடல் முக்கியத்துவம் கருதி, அவர்களின் சந்தை மற்றும் இராணுவ நலன்களுக்கே முன்னுரிமை கொடுத்து, சிறீலங்காவுடனான சமகால உறவைத் தக்கவைத்தல் என்னும் தந்திரோபாயத்திற்கே முதன்மை அளித்து தமது அரசை அனைத்துலக மட்டத்தில் ஏற்று அமைதி காப்பர் என்பது சிறீலங்கா அரசின் வெளியுறவு குறித்த எதிர்பார்ப்பாக உள்ளது. இந்த நம்பிக்கை காரணமாகச் சிறீலங்கா தனது தனிவழியில் ஈழத்தமிழரை இலகுவாக முற்றிலும் அடிமைப்படுத்தி விடலாம் என உறுதியாகச் செயற்படத் தொடங்கி விட்டது.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் எவ்வழி சென்று இதனை முறியடிக்கலாம்? ஒற்றுமையாக ஒரே அணியில் செயற்படுவது ஒன்றே ஒரே வழி. கூடவே இன்றைய அரசின் 'ஒரேநாடு ஒரே சட்டம்' கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் உடனும் பொதுப்பிரச்சினை என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். புலத்துத் தமிழர்களும் ஒன்றிணைந்து தாயகத் தமிழர்களுக்குப் பக்கத்துணையாக வேண்டும். காலந்தாழ்த்தாது உடனடியான செயற்பாடுகள் முக்கியமாகின்றன.

**– ஆசிரியர்**

# ஐ.நா அலுவலகம் நோக்கிய பேரணி

## - சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டுகோள்

அனைத்துலக காணாமல்போனவர்கள் தினத்தை முன்னிட்டு சிறீலங்கா அரசின் திட்டமிட்ட இனஅழிப்பினால் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் நீதி கோரும் போராட்டம் ஒன்றை இன்று (30) மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கேணல் கிட்டு பூங்காவில் இருந்தும், யாழ். பேரூந்து நிலையத்திலிருந்தும் கண்ணீர் வணக்கத்துடன் இந்த போராட்டம் ஆரம்பித்து ஐ.நா காரியாலயம் வரை சென்று ஐ.நா வதிவிடப் பிரதிநிதியிடம் ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கான மனு கையளிக்கப்பட்டு போராட்டம் நிறைவுக்கு வந்தது.



இவ்வெழுச்சிப் போராட்டத்தில் உறவுகளைத் தேடும் வலியுடனும், உணர்வுடனும் போராட்டம் நடைபெற்றது. இவ் உறவுகளின் வலிகளை அனைத்துல சமூகம் கருத்தில் எடுத்து உண்மையான நீதி வழங்க முன்வரவேண்டும் என்ற கருத்துக்கள் அங்கு மேலோங்கியிருந்ததை காண முடிந்தது.



இந்த போராட்டத்தில் பெருமளவான மக்களும், பல அரசியல் கட்சிகளை சேர்ந்த பிரதிநிதிகளும், மாணவர்களும் கலந்துகொண்டிருந் தனர்.



இலங்கையில் இடம்பெற்ற இந்த இன அழிப்பு விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்திற்கு





கொண்டு செல்வதற்கு ஏதுவாக அல்லது சிறப்பு தீர்ப்பாயம் ஒன்றில் கையாள்வதற்கு ஏதுவாக உரிய வேண்டுகோளுடன் பொருத்தமான இடத்தில் இதனை பாரப்படுத்துங்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமை ஆணைக்குழுவின் தலைவருக்கு கையளிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் உள்ள இலங்கை தூதரகம் முற்றுகை



அனைத்துலக காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு இன்று ஈழத்தில் இடம்பெறவுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு ஆதரவாக நேற்று தமிழகத்தில் ஈழத் தமிழ் உணரர்வாளர்கள் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.






நேற்று மாலை மூன்று மணிக்கு ஈழத் தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மேற்படி போராட்டம் இடம்பெற்றது.




இதில் உணர்வாளர்கள் பலர் பங்கேற்று இலங்கை அரசுக்கு எதிராக தமது கண்டன கோசங்களை எழுப்பினார்கள்.

# காணாமல் போனவர்களின் தகவல்களை சேகரித்தவர்கள் கூட

## சிறீலங்காவில் துன்புறுத்தப்பட்டனர்

**- ஜஸ்மின் சூக்கா**

காணாமல் போனவர்களின் பெயர்களை சேகரித்தவர்கள் கூட பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டதாகவும், இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் ஏறத்தாழ 15 பேருக்கு 2015 ஆம் ஆண்டு பிரித்தானியா அகதித் தஞ்சம் வழங்கியுள்ளது எனவும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயல்திட்ட அமைப்பு இன்று (30) அனைத்துலக காணாமல் போனவர்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா மேலும் தெரிவித்துள்ளதாவது:

போர் நிறைவடைந்து ஒரு தசாப்தம் நிறைவடைந்த போதும், போரில் காணாமல் போன தமது உறவுகள் தொடர்பில் உண்மையை தேடிய தமிழ் இளைஞர்கள் மிக்பெரும் விலையை கொடுத்துள்ளனர்.

தமக்கான நீதியை கேட்டும் செயல்முறையில் இந்த குடும்பங்கள் பல தடவைகள் பலியாக்கப்பட்டுள்ளார்கள். உண்மையை கண்டறிவதில் அக்கறை எதுவும் கொண்டிராத ஒரு அரசாங்கமே இதற்கான முழுப் பொறுப்பையும் கொண்டுள்ளது.

எமது இணையத்தளத்தில் 2009 ஆம் ஆண்டு மே 18 அல்லது அதற்கு அண்மையான நாட்களில் அரசபாதுகாப்பில் இருந்து காணாமல் போனதாக கூறப்படும் 340 தமிழர்களின் பெயர்கள் மற்றும் படங்கள் அடங்கிய ஒரு ஆவணம் உள்ளது. இலங்கை இராணுவத்திடம் அவர்கள் சரணடைவதைக் கண்ட பல சாட்சிகள் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதைக்கப்பட்ட மனிதம்

ஓ மானிடமே!
கடந்து போன காலங்களில் – நீ நடந்து வந்த
பாதைகளை
மறந்து போக நினைக்கும் அந்த நாட்களின்(ல்)
மறைக்கப்பட்ட உண்மைகள் யாவும் இன்று- உருப்பெற்று
உயிர்ப்பித்து விட்டன.
மானுடத்தின் மதிப்பு வெறும் மண்ணோடு புதைக்கப்பட்டு
விட்டது
மாண்டவர்கள் மீண்டும்
மீண்டிடப் போவதில்லை
இனி- ஆண்டாண்டு காலம் கடந்து போயினும் தமக்கான
ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட போவதில்லை – என்ற
சந்தோசத்தில் சம்மந்தப்பட்டவர்கள் சல்லாபித்திருந்த
வேளையில் தான் இத்தொடர் சம்பவங்கள் சூடு பிடிக்கத்
தொடங்கியிருந்தன.
ஆழத்தோண்டும் பணி இன்னும் அகலப்படுத்தப் பட்டது.
தோண்டத் தோண்டத் தோன்றிய எச்சமெல்லாம் நிச்சயம்
எம்மவர்கள் தமக்கான சாட்சியங்களாக எமக்காக
விட்டுச் சென்ற எச்சங்கள் தான்.
கடத்தப் பட்டோர், காணாமற் போனோர் ,
களநிலையறிந்து கடந்து போக எத்தனித்தோர்,
சம்பவ நாட்களின் பின் சரணடைய நினைத்தோர்,
துப்பாக்கி முனையில் தூக்கிச் செல்லப்பட்டோர் –
என்று அத்தனை நம் உறவுகளும் – அங்கே நொறுக்கப்
பட்ட என்புகளோடு விறகுகளாக பொறுக்கி
எடுக்கப்பட்டார்கள்.
'விதி' எனும் விளையாட்டினால்- பெயர் எனும் முகவரி
இழந்த நம்மவர் நடுவில் இவர்கள் 'சதி' எனும் சாவின்
பிடிக்குள் சிக்கி தம் மொத்த உருவினையும் இழந்து
இம்மண்ணிற்கு உரமாகிப் போய்விட்டார்கள்.
அரத்தினால் அறுக்கப்பட்டார்களா? அன்றேல்
ஆயுதத்தினால் சுடப்பட்டார்களா? இச்சையினால்
துகிலுரியப்பட்டார்களா? இல்லை ஈன்ற பாவத்திற்காய்
கொல்லப்பட்டார்களா? என்ற உண்மையை உலகம்
உணர்த்திட வேண்டும்.
ஊனும் உடலும் உருவம் எதுவுமேயற்ற இவர்கள்
என்றோ ஒரு நாள் .....தமக்கான நீதி கிடைத்திடும் என்ற
ஏக்கத்திலேயே மண்ணுக்குள் மடிந்து போனார்கள்.
இவர்களின் அந்தரங்க ஆத்மாக்கள் ஒன்றேதான்
யாராலும் அழிக்கப்படாத உண்மையான ஆதாரங்கள்.
நடந்தது என்ன? என்ற வினாவை நம் ஒவ்வொருவரின்
– நடைமுறை வாழ்வோடு இணைத்து நம்மையே
நாம் கேட்டுப்பார்த்தால் நிழல்களின் நிஜங்கள் நமக்கு
நிரூபணமாகி விடும். இருப்பினும்...
உள்ளத்து வலியினை உணர்வினால் மட்டுமே கொட்டிட
முடிகிறது.
முயற்சிகள் எதுவும் முழுமையடையவில்லை
உறுதியிழந்து உருக்குலைந்து நிற்கும் எங்கள் வாழ்வின்
விடிவிற்காய் இம்மண்ணிற்கு உரமாகிய இவர்கள் வாழ்வு
– வெறுமனே வாய்ச் சொல் மட்டுமல்ல – என்றுமே
வாழ்ந்து கொண்டிருக்கும் வரலாறு.

**தமிழ் நிலா**

# காத்துக்கிடக்கின்றன மனங்கள்....

எங்கள் உடலங்கள் ஊர்வலம் போகின்றன,
உயிர்களை எங்கோ இடைவெளியில் பிரிந்த
வலியில் உண்மையை மென்று விழுங்கி இன்னமும்
ஊசலாடுகின்றன...
சடலங்கள் கடந்துவந்து கையளித்த நம்பிக்கையில்
உங்களுக்கான காத்திருப்புக்கள் மீள மீள நீண்டு
கிடக்கின்றன...
வருடங்கள் பல உருண்டோட நாம் வீழ்ந்தும், வீழாத
எம் நம்பிக்கைகள் வரமாய் அவ்வப்போது முளைவிட
எம் பயணங்கள் பயமின்றித் தொடர்கின்றன...
தெருவெங்கும் உங்கள் திருவுருவப் பதாகைகள்
தாங்கிய எங்கள் இரவுகளும் பகல்களும் கண்ணீரில்
கரைந்தேகிக்கிடக்கின்றன...
வரக்கூடாத செய்தி எதுவும்
எம்வாசல் வந்துவிடக்கூடாதென இரஞ்சிக்கிடக்கிறது
மனம்,
அப்படியேதேனும் செய்தியொன்றைச் செவியால்
கேட்க முன்னமே சென்றுவிடவேண்டுமெனப்
பிரிந்துபோய்விட்டன காத்திருந்த சில தெருவோரப்
பறவைகள்....
பதைபதைத்த மனதோடு பாவியராய்,
பதாகைகளின்பின்னால் முகம்புதைத்து அழுகின்றோம்,
எம் ஆற்றாமை உணர்ந்து நீதி தேவதை எம் வாசல்
இன்னும் ஏன் இர(ற)ங்கி வரவில்லை?

**காந்தள்**

# ஒரு நீதியான தீர்வு சர்வதேசத்தின் ஊடாக கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது



திருமதி **யோகராசா கனகரஞ்சினி**

**வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி யோகராசா கனகரஞ்சினி அவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய பிரத் தியேக நேர்காணல்**

**கேள்வி:**

**தற்போது புதிய நாடாளுமன்றம் உருவாகியிருக்கிறது. இவ்வாறான சூழ்நிலையில் உங்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தின் எதிர்கால திட்டம் என்னவாக அமையும்?**

**பதில்:**

காலத்திற்குக் காலம் அரசும், ஆட்சியும் மாறிக் கொண்டு தான் இருக்கின்றது. எங்களுக்கான தீர்வு இலங்கை அரசால் ஒருபோதும் கிடைக்காது என்னும் பட்சத்தில் தான் நாங்கள் சர்வதேச விசாரணையைக் கோரி நிற்கின்றோம். இந்த ஆட்சி மாற்றங்கள் தமிழ் மக்களுக்கும், காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோருக்கும் எந்த விதமான ஒரு பிரயோசனத்தையும் பெற்றுத் தரப் போவதில்லை என்பது உறுதி.

ஏனென்றால், நாங்கள் தெருவிற்கு வந்து இன்று 11 வருடங்கள். இந்த பதினொரு வருடங்களிலும், பாராளுமன்றம் போன தமிழ்ப் பிரதிநிதிகள் எங்களுடைய பிரச்சினைகளை, தமிழர்களின் பிரச்சினைகளைகூறுகின்றோம் என்று கூறுகின்றார்களே தவிர, தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு இதுவரைக்கும் கிடைக்கவில்லை. இந்தச் சூழலால் நாங்கள் பின்னடைவையும், வேதனைக்குரிய நிலையையும் தான் அடைந்திருக்கின்றோம். எனினும் இலங்கை அரசிற்கு ஊடாக நீதி கிடைக்காத போது, சர்வதேசத்தின் ஊடாகத் தான் நீதியை எதிர்பார்த்திருக்கின்றோம்.

**கேள்வி:**

**புலம்பெயர்ந்து வாழ்கின்ற தேசங்களிலுள்ள தமிழ் சமூகமும், வெளிநாடுகளும் உங்களின் போராட்டங்களுக்கு எந்தவிதமான ஆதரவை வழங்க வேண்டுமென நீங்கள் எதிர் பார்க்கின்றீர்கள்?**

**பதில்:**

நாங்கள் எங்கள் போராட்டத்தை 2017மாசி 20ஆம் திகதி ஆரம்பித்த போது நாங்கள் இத்தனை காலம் இந்தப் போராட்டத்தை நடத்திச் செல்வோம் என்று ஆரம்பிக்கவில்லை. நாங்கள் கையளித்த பிள்ளைகள், தாங்களாகவே சரணடைந்த பிள்ளைகள், வைத்தியசாலைகளிலிருந்து கடத்தப்பட்ட பிள்ளைகள், வீடுகளுக்குள்ளே இருந்து வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்ட பிள்ளைகள் போன்றோர் எங்கோ ஒரு தடுப்பு முகாமில் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையில் இன்று வரை போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இலங்கை அரசு எங்கள் நம்பிக்கையான இந்தப் போராட்டத்தைக் கண்டு கொள்ளாதபோது, எங்களுக்கு அதற்கு ஊடான தீர்வைத் தராதபோது, இனிமேல் அவர்கள் தருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்க முடியாது. நாங்கள் இதுவரை காலமும் ஐ.நா. கூட்டத்தொடரின் 36ஆவது கூட்டத்தொடரிலிருந்து நாங்கள் அங்கு சென்று எங்கள் உண்மைக்கும் நீதிக்குமான போராட்டத்திற்கு நீதி வேண்டும் என்று நாங்கள் கேட்டு நிற்கின்றோம். சர்வதேசமும் இவ்வளவு காலமும் இழுத்தடிப்பைத் தான் செய்கின்றது. இலங்கை அரசைக் காப்பாற்றுகின்றது. கால அவகாசத்தைக் கொடுக்கின்றது. எங்களுடன் போராடிக் கொண்டிருக்கும் உறவுகளை நாங்கள் இழந்து கொண்டிருக்கின்றோம்.



2020 ஒகஸ்ட் 30ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்திலாவது எங்களுக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தர வேண்டும் என்று நாங்கள் சர்வதேசத்திடம் கேட்டு நிற்கிறோம். அதற்கான போராட்டம் வடக்கிலே யாழ்ப்பாணத்தில் பேருந்து நிலையத்திலிருந்து கச்சேரி வரைக்கும், கிழக்கிலே மட்டக்க ளப்பில் கல்லடிப் பாலத்திலிருந்து காந்தி பூங்கா வரைக்கும் எங்கள் போராட்டத்தை, எமக்கு நீதி கிடைக்கும் வரை போராடவுள்ளோம். எங்கள் போராட்டத்தை கொச்சைப்படுத்தி, இழிவுபடுத்தி நசுக்க முற்பட்டாலும் கூட, நாங்கள் அதிலிருந்து மீண்டெழுந்து எங்களுடன் உறவுகளுடன் வாழ்வதற்கு ஒரு தாய் இருக்கும் வரைக்கும் போராடுவோம்.

**கேள்வி:**

**1200 நாட்களைக் கடந்தும் உங்கள் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தப் போராட்ட காலத்திலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டவை என்ன?**

**பதில்:**

நாங்கள் இலங்கை அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்டோம். ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் சொன்னார்கள் 12,000 போராளிகளையும் புனர்வாழ்வளித்து அனுப்பி விட்டோம் என்று சொன்னார்கள். அப்படியாயின் அவர்களில் சர்வதேச செஞ்



சிலுவைச் சங்கத்தில் பதிவில் உள்ளவர்கள்கூட இன்னும் தங்கள் குடும்பங்களுடன் சேராது உள்ளனர். அவர்களின் உறவுகள் அவர்கள் எங்கே என்று தெரியாது எங்களுடன் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை 3 தடவைகள் சந்தித்தோம். எங்கள் பிரச்சினைகளை, எங்கள் கோரிக்கைகளை முன்வைத்தோம். அதற்கு அவர் உங்கள் பிள்ளைகள் திருவிழாவில் காணாமல் போகவில்லை. அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் காலம் தாழ்த்தி விட்டோம். நிச்சயமாக உங்களுக்கு ஒரு தீர்வு பெற்றுத் தருவோம், உங்களின் பிள்ளைகளை மீட்டுத் தருவோம் என்று கூறினார்.

இன்றுவரை எதுவும் நடக்கவில்லை. அவரும் போய்விட்டார். OMP என்ற காணாமல் போனோர் அலுவலகம் என்று வந்தது. எங்கள் பிள்ளைகள் காணாமல் போகவில்லை. காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அலுவலகத்தை காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகமாக மாற்றியமைக்க வேண்டும். அதற்கான பொறிமுறை ஊடாக எங்களுக்கான நீதியை தரவேண்டும் என்று நாங்கள் கேட்டிருந்தோம். அதற்காக மாவட்ட செயலணி ஊடாக மக்களின் கருத்துக்களை வாங்கி அவர்களிடம் கையளித்திருந்தோம்.

அது முற்றுமுழுதாக ஒரு OMP அலுவலகமாக அது செயற்படுவதை நாங்கள் நிராகரித்தோம். ஆட்சி மாற்றத்தின் பின்னர் என்ன செய்வதென்று தெரியாது அவர்களே விலகி போகும் அளவிற்கு வந்து விட்டது. பாதிக்கப்பட்ட தாய்மார்களை விட, தமிழர்களையும் ஏமாற்றுகின்றார்கள். எங்களுடைய வாழ்வாதாரங்கள், பண்பாடுகள், கலாச்சாரங்களை சீரழித்து வருகின்றார்கள். மொழியாலும், இனத்தாலும் வீழ்த்தப்பட்டதாலேயே பிள்ளைகள் ஆயுதம் ஏந்தினார்கள். இன்று அதேநிலையை தான் ஜனநாயக ரீதியாக அவர்கள் எங்களுக்கு செயற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஜனநாயகம் என்று பேசிக் கொண்டு அதன் ஊடாக எங்களை அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். எங்களை ஆயுதம் இல்லாமல் அழிக்கின்றார்கள்.

**கேள்வி:**

**உங்களின் இந்தப் போராட்டத்திற்கு வெளிநாடு, புலம்பெயர்ந்த தேசம் தவிர்ந்த எங்களின் தேசத்திலே, தாயகத்திலே மக்களின் ஆதரவு எப்படியிருக்கிறது?**

**பதில்:**

வடக்கு கிழக்கில் மட்டுமல்ல, தென்பகுதியிலுள்ள தமிழர்களும் எங்களுடன் தொடர்பு கொண்டு எங்களுக்கான நீதியைப் பெற்றுத்தர எங்கள் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக எங்களுடன் ஒன்றிணைகின்றா ர்கள். அதே போல 11 வருடமும் எங்களின் உறவுகளைத்தேடி நாங்கள் தெருவிலே இருக்கின்றோம். புலம்பெயர் தேசங்களிலுள்ள எங்கள் உறவுகள் இளைஞர்கள், யுவதிகள் எங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக அங்கே குரல் கொடுக்க முற்பட்டிருக்கின்றார்கள்.



கனடாவில் இன்று 500 கிலோமீற்றர் தூரத்திற்கு நீதிக்கான நெடும் பயணம் ஒன்றை ஆரம்பிக்கின்றார்கள். அவர்கள் வெறுமனே நடை பயணமாக

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

# புலம்பெயர் மக்கள் மத்தியில் எமது போராட்டத்திற்கான ஆதரவு தளம் உறுதியாக உள்ளது



திருமதி **அமலதாஸ் அமலநாயகி**

**புலம்பெயர் மக்கள் மத்தியில் எமது போராட்டத்திற்கான ஆதரவு தளம் உறுதியாக இருப்பதன் காரணமாகவே நாங்கள் தொடர்ந்து போராடி வருகின்றோம். இனியொரு கடத்தல், காணாமல்போதல் நடைபெறக் கூடாது என்ற காரணத்தினாலேயே நாங்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என வடகிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளரும், அச்சங்கத்தின் கிழக்கு மாகாண தலைவியுமான திருமதி அமலதாஸ் அமலநாயகி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.**

**கேள்வி:**

**தற்போது சிறீலங்கா அரசியலில் தோன்றியுள்ள சூழ்நிலையில் உங்கள் போராட்டத்தை மேற்கொண்டு முன்நகர்த்துவதற்கான திட்டம் என்ன?**

**பதில்:**

நாங்கள் இந்த நாட்டில் எமது உறவுகளை தேடி முன்னெடுக்கும் போராட்டத்தில் இலங்கை அரசாங்கத்தில் இருந்து எந்த எதிர்பார்ப்பினையும் செய்யாமலேயே போராடி வருகின்றோம். தற்போதுள்ள அரசாங்கத்திடம் இருந்து எந்தவித தீர்வும் எங்களுக்கு கிடைக்கப்போவதுமில்லை. தற்போதைய சூழலில் தொடர்ச்சியாக போராட்டங்களை கொண்டுசெல்ல முடியுமா என்ற சந்தேகம் உள்ள போதிலும், வலியுடன் போராடிவரும் மக்கள் என்ற வகையில் எவ்வாறான தடைகள் ஏற்பட்டாலும் எங்கள் போராட்டம் முன்னெடுக்கப்படும். இன்று தமிழர்களுக்கான குரலும் பாராளுமன்றத்தில் குறைந்துள்ளது. கடந்த காலத்தில் 22 உறுப்பினர்கள் 16 உறுப்பினர்கள் என்று எமது பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் இருந்த போதும், அவர்களினால் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலையே இருந்தது. இன்று அந்த பிரதிநிதித்துவம் குறைந்துள்ள நிலையில் அவர்களினால் இனிவரும் காலங்களில் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பதும் கேள்விக்குறியே.

**கேள்வி:**

**புலம்பெயர் தமிழ் சமூகமும், வெளிநாடுகளும் உங்களின் இந்த போராட்டத்திற்கு எந்த வகையான ஆதரவுகளை வழங்க வேண்டும் என நீங்கள் எதிர்பார்கிறீர்கள்?**

**பதில்:**

இன்று புலம்பெயர் மக்கள் மத்தியில் எமது போராட்டத்திற்கான ஆதரவு தளம் உறுதியாக இருப்பதன் காரணமாகவே நாங்கள் தொடர்ந்து போராடி வருகின்றோம். குறிப்பாக இளையோர் மத்தியில் எமக்கான ஆதரவு தளம் உணர்வு ரீதியாக அதிகரித்து வருகின்றது. இந்த ஆதரவு தளமே எமது போராட்டத்தினை உறுதியுடன் முன்நகர்த்துகின்றது. கனடாவில் உள்ள இளையோர் அமைப்பினால் பாரிய நடைபவனியொன்று சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிகின்றோம். இவ்வாறு ஜேர்மன், இலண்டன் உட்பட பல நாடுகளில் உள்ள இளைஞர்களினால் தாயகத்தில் நடைபெற்ற இன அழிப்பு, கடத்தல் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டி முன்னெடுக்கும் தொடர்ச்சியான போராட்டம் வலுவானதாக இருப்பதன் காரணமாகவே சர்வதேசம் இன்று எம்மை நோக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

புலம்பெயர் தேசத்தில் உள்ள உறவுகள் தங்கள் மத்தியில் உள்ள வேறுபாடுகளை மறந்து அனைத்து உறவுகளும் ஒன்றிணைந்து பலமான குரலை வெளிப்படுத்துவதன் ஊடாக சர்வதேசம் எங்களுக்கான தீர்வினை வழங்குவது குறித்து சிந்திக்கும் நிலைமையேற்படும். சர்வதேச நாடுகளைப் பொறுத்தவரையில், இலங்கை அரசாங்கம் போர்க்குற்றங்களில் கடத்தல்கள், இன அழிப்புகளை செய்துள்ளது என்பதை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் ஊடாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்று நாங்கள் இலங்கையில் எங்களுக்கான தீர்வுகள் வழங்கப்படாது என்ற உறுதியான நிலைப்பாடு உள்ள நிலையில் எமக்கான நீதியைப் பெற்றுத்தர சர்வதேச சமூகம் முன்வர வேண்டும்.

**கேள்வி:**

**1200 இற்கு மேற்பட்ட நாட்களை கடந்து மேற்கொள்ளப்படும் இந்த போராட்டத்தின் போது நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன?**

**பதில்:**

72 தாய்மார்கள் என்ன 750தாய்மார்கள் இறந்தாலும் இந்த அரசாங்கம் எங்களை திரும்பிக்கூட பார்க்கமாட்டாது என்பதே நாங்கள் கற்றுக்கொண்ட பாடமாகும். எங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று வெளிவேசத்துடன் நுழைந்து எமது போராட்டத்தினை சின்னாபின்னமாக்கும் செயற்பாடுகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. எங்களின் குரல்வலைகளை நசுக்கும் செயற்பாடுகளை மிகவும் நாசூக்கான முறையில் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இந்த நாட்டில் உள்ள எந்த அரசும் எமக்கான நீதியை வழங்கப்போதில்லை. மாறாக எமது போராட்டத்தினையும் எமது உணர்வினையும் இல்லாமல் செய்யலாம் என்ற வகையிலேயே செயற்படுகின்றது.

**கேள்வி:**

**உங்களின் இந்த போராட்டத்திற்கு தாயகத்து மக்கள் அதிக ஆதரவுகளை வழங்கி வருகின்றார்களா?**

**பதில்:**

உண்மையில் தாயகத்தில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து கிடைக்கும் ஆதரவு காரணமாகவே நாங்கள் தொடர்ச்சியான முறையில் பல போராட்டங்களை பாரியளவில் முன்னெடுக்கும் நிலையேற்பட்டது.

பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் தமிழ் உறவுகள் எமக்கான போராட்டத்திற்கு தொடர்ச்சியான ஆதரவினை வழங்கி வருகின்றது. கடந்த முறை மட்டக்களப்பில் இந்த போராட்டத்தினை மேற்கொண்ட போது ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு எங்களுக்கு ஆதரவு வழங்கினர். இளையோர் மத்தியில் எமது போராட்டத்திற்கான ஆதரவு அதிகளவில் காணப்படுகின்றது. நாங்கள் எங்கள் சொந்தங்களை இழந்து அனுபவித்த வேதனைகளையும் சோதனைகளையும் எமது எதிர்கால சமூகம் அனுபவிக்க கூடாது. இனியொருபோதும் எமது சமூகத்தில் யாரும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்படும் சூழ் நிலையுருவாகக் கூடாது என்ற காரணத்தினாலேயே நாங்கள் இவ்வாறான போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

• • •

### ஒரு நீதியான தீர்வு ... தொடர்ச்சி...

இல்லாது, தாங்கள் செல்லும் வழிகளில் எங்களின் போராட்டங்களை மக்களுக்கு விளங்கப்படுத்தி அவர்களை இணைத்து செப்டெம்பர் மாதம் 15, 16ஆம் திகதியளவில் தங்கள் பயணத்தை நிறைவு செய்யவுள்ளனர். புலம்பெயர் நாடுகளில் உள்ள இளைஞர்கள், யுவதிகள் தாய்மார்களின் கண்ணீரைப் புரிந்து கொண்டு எங்களுக்காக குரல்கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

நிச்சயமாக ஒரு நீதியான தீர்வு சர்வதேசத்தின் ஊடாக கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. கனடாவில் மட்டும் அல்ல பிரித்தானியா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்தில் வாழுகின்ற எங்கள் உறவுகள் இந்த சர்வதேச காணாமல் அக்கப்பட்டோர் தினத்திலே தாயகத்தில் வாழ்கின்ற எங்கள் உறவுகளுக்காக அவர்கள் அங்கே குரல் கொடுத்து போராட்டங்களை செய்கின்றார்கள். அவர்களுக்கு நாங்கள் எங்கள் கண்ணீருடன் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

**கேள்வி:**

**இலங்கையைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழக மாணவர்களும், இளைஞர்களும் உங்கள் போராட்டத்திற்கு எவ்வாறு வலுச் சேர்க்கின்றார்கள்.**

**பதில்:**

பல்கலைக்கழக மாணவர்களின் பலம் எங்களிடம் நிறையவே இருக்கின்றது. வவுனியாவில் நடைபெற்ற போராட்டம் என்றாலும் சரி, கடந்த நான்கு ஆண்டுகளாக நாங்கள் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு இருந்தது. எங்களின் மாணவர்கள், இளைஞர்கள், கிராம மட்ட அமைப்புக்கள் எங்களுடன் இருக்கின்றார்கள். மேலும் எமது தமிழ் உறவுகள் அனைவரும் இந்த 8 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு வலுச்சேர்த்து எங்களின் போராட்டத்திற்கு பலமாகவும், உறுதியாகவும், எங்களுக்கு நீதி கிடைக்கும் வகையிலும் அவர்கள் எங்களுடன் ஒன்றிணைந்து இந்தப் போராட்டங்களில் கலந்து கொள்கின்றார்கள் என்பது தான் உண்மை.


# நடந்ததும், நடப்பதும், நடக்க வேண்டியதும்

அஞ்பன்

தமிழர் தாயகமாக இருந்த இலங்கைத் தீவு முழுவதும், இத்தீவில் ஏற்பட்ட நிகழ்வுகளால் தமிழர்களின் ஆளுகைப் பகுதி, சிங்களவர்களின் ஆதிக்கப் பகுதிகளாக வெவ்வேறாகியது. இலங்கையில் ஐரோப்பியர்களின் வருகையும், அவர்களின் வெளியேற்றமும் இலங்கை சுதந்திரமடைந்து வெவ்வேறாக இருந்த தமிழர், சிங்களவர் ஆளுகைப் பகுதி ஒன்றிணைந்ததோடு இலங்கைத் தீவு முழுவதும் சிங்களவர் ஆட்சியின் கீழ் வருவதற்கு வழிவகுத்தது.

இந்த நிலை இலங்கையை சிங்களபௌத்த நாடாக மாற்றுவதற்கும் வழிவகுத்தது. இதுவே இலங்கையை ஆட்சி புரிந்த சிங்கள இனவாதக் கட்சியினரால் தமிழர் தாயகப் பகுதிகளை சிங்களமயமாக்கும் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கென முதலில் தமிழர் தாயக எல்லைப் பகுதிகளும், அதன் பின்னர் தமிழர் தாயக மாவட்டங்களும் தெரிவு செய்யப்பட்டன.

ஆரம்பத்தில் தமிழர் தாயக எல்லைகளை சிங்களமயப்படுத்தி அதன் பின்னர், முதலில்



தமிழர் தாயகப் பகுதியான கிழக்கு மாகாணம் தெரிவு செய்யப்பட்டது. இதற்கென நீர்ப்பாசனத் திட்ட அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் நீர்ப்பாசனத் திட்டங்கள் சிங்களப் பெயர்களாக மாற்றம் செய்யப்பட்டன. இத்திட்டங்கள் யாவும் தமிழர் தாயக மாவட்டங்களை துண்டாடியதோடு இப் பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் வாழ்வு நிலை வாழ்வு இயக்கங்கள் அழிக்கப்பட்டும், அவர்கள் கொலை செய்யப்பட்டும் அப்பகுதிகளில் இருந்து தமிழ் மக்கள் இடம்பெயரும் சூழ்நிலையும் உருவாகியது.

முதலில் தமிழர் தாயகப் பகுதியான கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்து, பின்னர் வடக்கு, வடமேல் மாகாணப் பகுதிகளிலும் தொடர்ந்தது.

**• கல்லோயாத் திட்டம்**

கிழக்கு மாகாணப் பகுதியான மட்டக்களப்பு மாவட்டத்தில் வளமான பட்டிப்பளை ஆறு கல்லோயாவாக மாற்றப்பட்டு திட்டம்




மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் நூறு சதவீதம் தமிழ் மக்கள் வாழ்ந்த மட்டக்களப்பு மாவட்டம் துண்டாடப்பட்டு, 19.03.1960 அன்று அம்பாறை என்ற சிங்கள மாவட்டத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. இம் மாவட்டம் பின்னர் திகாமடுல்ல மாவட்டம் என 1978இல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதற்கு இம் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட தீகவாவி என்ற சிங்கள பௌத்த விகாரையே காரணமாக அமைந்தது. இவ்விகாரையின் மணியோசை கேட்கும் இடங்கள் யாவும் இவ் விகாரைக்கு சொந்தம் என அறிவிக்கப்பட்டு, அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு சிங்களமயமப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தினால் 7000 சதுர கிலோமீற்றருக்கு மேற்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருந்த மட்டக்களப்பு மாவட்டம் 4500 கிலோமீற்றருக்கு



மேற்பட்ட நிலப்பரப்பைக் கொண்ட அம்பாறை என்ற சிங்கள மாவட்டமாகவும், 2500 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்ட தமிழ் மாவட்டமாகவும் துண்டாடப்பட்டது. இதன் பின்ன மட்டக்களப்பு மாவட்டத்தை மேலும் துண்டாடும் வகையில் மதுறு ஓயாத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**• தமிழர் தாயகத்தின் தலைநகரை சிதைக்கும் திட்டங்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்தை தொடர் ந்து கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை மாவட்டத்தை சிங்களமயப்படுத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இம் மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட கோகர்ண விகாரை, திரியாய் விகாரை, செருவில் விகாரை, வில்கம் விகாரை என பல விகாரைகளும் இம் மாவட்டத்தில் தொன்மையை திரிபுபடுத்தியதோடு இவ் விகாரைகளோடு இணைத்து அமைக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களும் இம் மாவட்டத்தை சிங்களமயப்படுத்த உதவியது.


இந்த மாவட்டத்தில் அமைந்திருந்த 'யானைஆறு' 'யான் ஓயா' எனவும், 'முதலிக்குளம்' 'மொரவேவா' எனவும், 'பெரியவிளாங்குளம்' 'மகாதிவுல்வெவ' எனவும், 'குமரேசன் கடவை' 'தோமரங்கடவல' எனவும், 'கந்தளாய்' 'கந்தளாவ' எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிங்களமயப்படுத்தப்பட்டது.

இதேபோன்று 'செருவில்' 'சேருவில' என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டு இந்தப் பெயரில் இம் மாவட்டத்தில் புதிய சிங்களப் பாராளுமன்ற தேர்தல் தொகுதி 1977 ஜுலை இல் உருவாக்கப்பட்டது. இந்தத் தேர்தல் தொகுதிக்கு இம் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 576 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டது. இம்மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 1020 சதுர கிலோ மீற்றராகும்.

இதே போன்று பல்வேறு திட்டங்கள் கிராம, பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு, இம் மாவட்டத்தில் உள்ள பத்துப் பிரதேச செயலர் பிரிவுகளில் ஆறு பிரதேச செயலர் கள் பிரிவுகள் உருவாக்கப்பட்டது.

**• வெலிஓயாத திட்டம்**

தமிழர் தலைநகரைத் தொடர்ந்து தமிழர் தாயக மாகாணங்களை துண்டாடும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மணலாறு என்ற




பகுதி 1988 ஏப்ரல் 16இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் வெலிஓயா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்திட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை துண்டாடும் வகையில் மேற்கொள்ளப்பட்டன. தமிழர் தாயக மாவட்டங்களான முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா மாவட்டப் பகுதிகளையும் சிங்கள மாவட்டத்தின் (அநுராதபுர மாவட்டம்) பகுதிகளையும் இணைத்து இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டதோடு, இப்பகுதி தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு அநுராதபுர மாவட்டத்தின் கீழ் தனி மேலதிக அரச அதிபரின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

**• மலவத் ஓயா திட்டம்**

'அருவிஆறு' மல்வத் ஓயா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இலங்கையின் வடமாகாணத்தையும், வடமேல் மாகாணத்தையும் துண்டாடும் வகையில் மேற்கொள்ளப்பட்டது. 1969இல் இத்திட்டம் வரையப்பட்டிருந்தாலும் 2009இல் அது நடைமுறைக்கு வந்தது. இத் திட்டம் வடக்கு மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தையும், வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தையும் துண்டாடியது.

**• தெதுறு ஓயாத் திட்டம்**

மாயன் ஆறு தெதுறு ஓயா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது, இத்திட்டம் புத்தளம் மாவட்டத்தை துண்டாடி சிலாபம் என்ற சிங்கள மாவட்டம் உருவாவதற்கு வழிவகுத்தது.

**• வவுனியா தெற்குப் பிரதேசத் திட்டம்**

வடக்கு மாகாணத்தை சிங்களமயப்படுத்தும் வகையில் இம் மாகாணப் பகுதியான வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தமிழ் மக்களின் ஜனநாயகப் போராட்டங்களை அழிப்பதற்காக உருவாக்கப்படும் ஆயுதக் குழுக்கள்

**மட்டூரான்**




தமிழர்களின் தாயகமான வடகிழக்கு மாகாணம் என்பது இன்றும் கட்டுக்கோப்புடன் தமது கலை, கலாசாரத்தினைப் பேணி தமது மொழியுரிமைக்கு பங்கம் ஏற்படாத வகையில் செயற்படும் மாகாணங்களாகும்.

கடந்த காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் மற்றும் அதன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்கங்களே இந்த நாட்டில் தமிழரை ஆயுதம் ஏந்தி போராடும் நிலைக்கு கொண்டு சென்றது.

இந்த ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இராஜதந்திர ரீதியான போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், வடகிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் மத்தியில் உள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலைமையினை பயன்படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு வகையான செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.




குறிப்பாக வடகிழக்கில் உள்ள தமிழ் இளைஞர்களை குறிவைத்து பல்வேறு சம்பவங்கள் முன்னெடுக்கப்படுவதுடன், அவர்கள் மத்தியில் உணர்வு ரீதியான விடயங்களை இல்லாமல் செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகள் பல்வேறு வழிகளில் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக வடக்கில் கடந்த காலத்தில் ஆவாக்குழு உருவாக்கம் தொடக்கம் போதைவஸ்து வியாபாரம் வரையில் பல்வேறு வழிகளில் தமிழ் இளைஞர்கள் பயன்படுத்தப்பட்டு, அவர்கள் மத்தியில் தமிழ் உணர்வும், போராட்ட உணர்வும் சிதறடிக்கச் செய்யும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளின் உச்சக்கட்டமே நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் வடகிழக்கில் தமிழ் தேசிய உணர்வுமிக்க கட்சி வேட்பாளர்கள் பெற்ற வாக்கினை விட தமிழ் தேசியத்திற்கு எதிரானவர்கள் பெற்ற வாக்குகள் அதிகமாக இருந்ததற்கான காரணமாகும்.

இதற்கு காரணம் இளைஞர்கள் ஒருசாரார் மத்தியில் பணம் தொடர்பிலும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் மூளைச் சலவை செய்யப்பட்டு, தமிழ் தேசியம் தொடர்பான சிதைவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உறுதியாக தமிழ் தேசியத்தின்பால் பற்று உள்ளவர்கள் போக அன்றாடம் அல்லல்படும் பலர் இன்று அதற்கு அப்பால் சென்றுள்ளதை காண முடிந்தது.



இது ஒருபுறமிருக்க, இன்று தமிழ் இளைஞர்கள் மத்தியில் குழு மோதல்களும், வாள்வெட்டு கலாச்சாரங்களும், போதைப்பொருள் பாவனையும் அதிகரித்து வருகின்றது.

வடக்கில் இந்த நிலை பரவலாக இருந்த அதேநேரம், இன்று இந்த நிலைமை கிழக்கு மாகாணத்திலும் திட்டமிட்ட வகையில் பரப்பப்படும் நிலைமை உருவாகி வருகின்றது. அரச புலனாய்வுத்துறையின் நேரடி கண்காணிப்பின் கீழ் இந்த வாள்வெட்டுக் குழுக்கள் இறக்கப்படுவதான சந்தேகங்கள் இன்று தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே தமிழர்கள் செறிந்து வாழும் நிலையுள்ளது. இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக வாள்வெட்டுக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அதன் ஊடாக பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்று வருவதுடன், இதுவரையில் இருவர் உயிரிழந்த நிலையும் உள்ளது.

குறிப்பாக இந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் நகரினை அண்டிய தமிழர்கள் வாழும் பகுதிகளில் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பும், வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசங்களும் அதிகரித்த நிலை காணப்படுகின்றது.

பாதுகாப்பு தரப்பினரின் செயற்பாடுகள் அதிகளவில் உள்ள இந்த காலப்பகுதியில் இவ்வாறான வாள்வெட்டுக் குழுக்கள் உருவாக்கம் தொடர்பில் எதுவும் தெரியாத நிலையில் அவர்கள் இல்லை.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கல்லடிப் பகுதியில் இரண்டு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் வாள்வெட்டுக்குள்ளான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

அன்றைய தினம் கல்லடி, விபுலானந்தா இசை நடனக்கல்லூரி வீதியில் உள்ள சில வீடுகளுக்கு வாள்கள், பொல்லுகளுடன் சென்ற குழுவினரால் குறித்த வீடுகள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று செங்கலடி, ஐயன்கேணி பகுதியில் பாடசாலை மாணவன் ஒருவர் வாள்வெட்டுக் குழுவினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இரண்டு மாணவர்களிடையே ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக இந்த கொலை நடைபெற்றுள்ளது.

இந்த கொலையை பார்த்தால் ஏதோ தற்செயலாக நடைபெற்றதாக கொள்ள முடியாது. குறித்த பகுதியில் வாள் வெட்டுக் குழுவினர் தொடர்பான அட்டகாசங்கள் குறித்து பல தடவைகள் அப்பகுதி மக்களினால் காவல் துறையினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோதும், அது தொடர்பில் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பு தரப்பினரும் புலனாய்வுத்துறையினரும் பெருமளவு உலாவும் இப்பகுதியில் வாள்களுடன் தினமும் மோட்டார் சைக்கிளில் வலம் வரும் வாள்வெட்டு குழுவினர் தொடர்பான தகவல்கள் தெரியாமல் இருக்கவா போகின்றது.



மிகவும் திட்டமிடப்பட்ட வகையில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் இவ்வாறான செயற்பாடுகள் உட்புகுத்தப்படுகின்றன. இப்பகுதியில் மிகவும் வெளிப்படையாகவே இவ்வாறான வாள்வெட்டுக் குழுக்கள் செயற்படுகின்றன. இவர்கள் தென்னிலங்கையில் உள்ள சிலருடனும் தொடர்புகளைப் பேணுவதான தகவல்களையும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# வரலாற்று புகழ்மிக்க திருமங்களாய் சிவன் கோவிலை நோக்கிய ஒரு பயணம்

அதிகாலை 4 மணிக்கு அம்மா போட்டு தந்த தேனீரை அருந்திவிட்டு நல்ல குளிர் தாங்கக் கூடிய சேட்டும், அந்த நேரம் கொரோனா என்ற தால் முகக்கவசமும் போட்டுக் கொண்டு பகத்து வீட்டு சக்தி அண்ணாவையும் அழைத்துக் கொண்டு மூதூர் நோக்கி பயணத்தை ஆரம் பித்தேன்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை - நாவலடி சந்தி - வாகரை - செருவிலை தாண்டி திருகோண மலை பக்கம் வாருகிற நேரம் மூதூருக்கு செல்ல முதல் நீலாபொல என்று ஒரு பெயர் பலகையோட ஒரு சந்தி வரும்.

முதல் பாரதி புரம் என்று தான் அந்த இடத் தில் பெயர் பலகை இருந்தது. அதை அகற்றிவிட்டு இப்ப கொஞ்ச நாளாக தான் நீலா பொல என்ற சிங்கள ஊர் பெயர் பலகையை வைத்தார்களாம். (ஊர் மக்கள் தெரிவித்தார்கள்)

நீலாபொல சந்தியில ஒரு உணவகம் உள் ளது செருவிலை கடந்து வருகிற நேரம் திறந்து இரு ந்தது அந்த கடை மட்டும் தான்.

அங்கே தேனீர் அருந்தி 3 பரோட்டாவும் சாப்பிட்டோம், அப்போ அந்த நேரம் அதிகம் பசிக் கவில்லை. அதிகாலை நேர பிரயாணம் என்றதால் களைப்பும் இருக்கவில்லை. எனினும் காட்டுக்கு ள்ளே போன பிறகு பசி எடுத்தால் என்ன செய்வது என்று பேசிக்கொண்டே சாப்பிட்டு முடிக்க நேரம் 7 மணியை அண்மித்து விட்டது.

மேலதிகமாக 3 மரக்கறி ரொட்டியும் வாங்கி கொண்டு நீலாபொல வீதியால் போய்க்கொண்டு இருந்தோம்.

வீதிக்கு அருகாக பெரிய வாய்காலும் அது நிறைய தண்ணீரும் நீண்ட தூரம் வரை எங்களுடன் வந்துகொண்டே இருந்தது.

அப்போ சக்தி அண்ணா கூறினார் "இன் னும் 8 மணி கூட ஆகவில்லை, காட்டு மிருகங்க ளின் நடமாட்டம் குறைந்திருக்காது, நாம எப்படி யாச்சும் எட்டு மணி வரைக்கும் காத்திருக்க வேணும்." என்று.

ஓம் அண்ணா எனக்கும் அதுதான் சிந்த னையாக இருக்கு என நான் கூறமுதல் நீங்களே கூறீட்டீங்கள்.

அங்கே என்னென்ன மிருகங்கள் இருக்கும். அவைகளிடமிருந்து எப்படி தப்பிப்பது என்று நிறைய பயம் கலந்த கதைகளை பேசிக்கொண்டே போய்க் கொண்டிருந்தோம்.

போகும்போது கங்குவேலி எனுமிடத்தில் 8 மணி வரை நேரத்தை செலவிட்டுவிட்டு லிங்க புரம் காட்டு பகுதியின் எல்லையில் உள்ள அணைக் கட்டில் உந்துருளியில் பயணித்தவாறு காட்டுக்குள் இறங்குவதற்கு வழியை தேடிக்கொண் டே 2-3 கிலோமீட்டர்கள் பயணம் செய்தோம்.

காட்டுக்குள் செல்வதற்கென பிரதான வழி கள் ஏதும் இல்லை என்பதால் சரியான பாதையை கண்டுபிடிப்பதும் பின்னர் போன வழியால் திரு ம்பி வந்து ஊருக்குள் சேருவது என்பதும் மிகவும் கடினமான வேலை.

அணைக்கட்டிலிருந்து காட்டுக்குள் உந்துரு ளியை இறக்க முடியாதவாறு யானை வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. இறுதியாக யானை வேலி முடிவடையும் இடத்தில் காட்டுக்குள் ஆட்கள் சென்று வந்த அடையாளங்களுடன் ஒரு வழிப் பகு தியைக் கண்டு பிடித்தோம்.

அதேவழியால் நாமும் சற்றுதூரம் பயணிக்க கழுமரம் போன்ற அமைப்பில் கீழே பெரிய அள வான கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்ட அமைப்பு ஒன்று எம்மை வரவேற்றது.

அதை கண்டதும் ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி காட்டுக்குள் இறங்கி விட்டோம் எனும் பயம் இருந்தாலும் சரியான பாதையில் தான் பயணிக்கிறோம் என நினைத்து மகிழ்ச்சியில் இருந்தோம்.

சில நாட்களுக்கு முன்னர் அந்த இடத்தில் ஏதோ சடங்கு நடைபெற்றிருக்க வேண்டும் என நினைக்கிறேன். பூசைப் பொருட்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

மட்டுநகர் திவா



அந்த இடத்திலும் நின்று வணங்கி விட்டு சில புகைப்படங்களும் எடுத்துவிட்டு வாகனங்கள் சென்று வந்த பாதையிலேயே தொடர்ந்து பயண த்தை லிங்கபுரம் காடு நோக்கி பயணித்தோம்.

மண்ணில் உரலை வைத்து வைத்து எடுத் தது போல பாதச்சுவடுகள் தெரியத் தொடங்குகிறது. அவ்வளவாக பயப்படவில்லை. எது நடந்தாலும் சமாளிப்போம் இனி பின்வாங்க முடியாது என்ற நிலையில் அடி பார்ப்பதற்காக சக்தி அண்ணா இற ங்கி சென்றார்.

நானும் அவர் பின்னாலே உந்துருளியை மெதுமெதுவாக எடுத்துக்கொண்டு சென்றேன். நாம் செல்லும் பாதையில் இருந்து யானையின் பாதம் விலகிச் சென்று கொண்டே இருப்பதால் அந்த யானை தற்போது இந்த இடத்தில் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு மீண்டும் சற்று வேகமாகவும் அவதானமாகவும் சென்று கொண்டிருந்தோம்.

அடி பார்க்க தெரியாதவன் காட்டு வழியில் பயணிக்க தகுதியற்றவன் என கூறுவார்கள். காட்டு மணலில் பதிந்து இருக்கும் கால் தடங்களை வைத்தே என்னென்ன இடர்கள் என்னென்ன மிரு கங்களால் வரும் என முன்கூட்டியே நாம் கணிக்க வேண்டும்.

அப்போதுதான் தாக்குதல்கள் நடத்தப்பட் டாலும் சமாளிக்கும் சந்தர்ப்பம் நம்மிடம் இருக் கும்.

அனேகமான மிருகங்கள் மனிதரைப் போன்று எடுத்தவுடன் தாக்காது. எப்படியும் நம் மிடமிருந்து விலகிச் செல்லவே எத்தனிக்கும் அவை அவ்வாறு விலகிச்செல்ல இடம் கொடுப் பதே நம்மால் செய்யக்கூடிய முதலாவது வேலை.

அப்படி விலகிச்செல்ல முடியாவிடில் அவை தற்காப்புக்காக நம்மை தாக்கி விட்டுச் செல் லவே எத்தனிக்கும் அதற்கு இடம் கொடுக்காமல் காட்டு மிருகங்களை கண்டதும் நாம் அவற்றிட மிருந்து விலகிச் செல்வதே புத்திசாலித்தனம்.

நாம் போகும் வழியில் மரை, குரங்கு, மயில், உடும்பு, முயல் போன்றவையும் கண்ணில் பட்டது. அவற்றை நாம் தொந்தரவு செய்யவில்லை எனினும் எம்மைக் கண்டவுடன் சற்று மறைவான இடத்தில் அவை சென்றுவிட்டன.

காட்டுக்குள் ஒரு மணி நேரபயணத்தின்பின் திருமங்களாய் சிவன் கோவிலை வந்தடைந்தோம். மட்டக்களப்பில் இருந்து அண்ணளவாக 90 மைல் தொலைவிலும் கிளிவெட்டி பிரதேசத்தில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவிலும் இந்த லிங்கபுரம் என்ற காட்டு பகுதி உள்ளது.

முன்பு இந்த இடம் திருமங்களாய் என அழைக்கப்பட்டது. தமிழர்கள் செறிவாய் வாழ்ந்த இந்த பகுதி, 1964 இன் பின்னர் உருவான கலவரங்களால் அடர் ந்த வன பகுதியாய் மாறி காடு களாக மாறியது என அறிய முடிந்தது.

திருமங்களாய் சிவன் கோவில் ஓர் மிக புராதன சிவன் கோவில் தான் என முதல் பார் வையிலேயே அறிய முடிந் தது.

திருகோணமலை வரலாற்றை கூறும் திரு க்கரசை புராணம் என்ற வரலாற்று நூலில் திருமங் களாய் பற்றி பல குறிப்புகள் உள்ளன.

"இடைபிங் கலைஇம வானோடிலங்கை நடுநின்ற மேரு நடுவாம் சுழுனை கடவும் பாலை வனம் கைகண்ட மூலம் படர்வொன்றி யெண்ணும் பரமாம் பரமே"

என திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிடும் தில்லைவனம் இந்த லிங்கபுரம் வனமாகவே இருக்க வேண்டும் என்பதும் ஒரு கதை. இது எவ் வளவு உண்மை என நிரூபிக்கும் அளவு அறிவு எனக்கில்லை.

அறிந்தவற்றை ஒப்புவிக்கிறேன் அவ்வளவு தான். ஆர்வம் உள்ளவர்கள் ஆதாரத்தை தேடி எடுத் துக் கொள்ளலாம்.

கோவிலுக்கு வந்து சேர்ந்ததும் எல்லைய ற்ற மகிழ்ச்சி. இது கோவிலை கண்டதால் வந்த மகிழ்ச்சி என்பதை விட ஒரு விலங்கிடமும் நாம் மாட்டிக் கொள்ளவில்லை என்கின்ற மகிழ்ச்சி தான் எனலாம்.

வந்து இந்த இடத்தை பார்க்கும் போதே ஒரு வகை பயத்தையும் ஆச்சரியத்தையும் ஒரே நேரத்தில் என்னுள் உணர முடிந்தது.



ஏற்கனவே தொல்பொருள் ஆய்வாளர்கள் வந்து முழுமையாக ஆராய்ச்சிகளை முடித்த இடம் என்பதால் அத்திவாரம் வெட்டிய குழிகள் போல இருந்த குழிகள் கண்ணில் பட்டது ஆச்சரியம் இல் லை. எனினும் அங்கு இருந்த பழைமை வியக்க வைத்தது.

கோவில் என சொல்லும் போது ஒரே ஒரு கட்டடம் தான் கட்டடம் போன்ற கட்டமைப்புடன் இருந்தது. மற்றவை எல்லாம் உடைந்து விட்டது. புதிதாக யாரோ லிங்கம், நத்தி, பலிபீடம் என்பவற் றை பிரதிஷ்டை செய்துள்ளார்கள். அவை மட்டும் அங்கே புதியவை என முதல் பார்வையிலேயே அறியக்கூடியதாக இருந்தது.



சுற்று வட்டாரத்தில் நேர்த்தியான பொழி யப்பட்ட தூண்கள் மற்றும் குழிக்கற்கள் எவ்வளவு பிரம்மாண்டமான கோயில் அவ்விடத்தில் இரு ந்திருக்கும் என்பதை சான்று பகிர்கின்றன.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# செங்கொடியின் நினைவும் ஏழுதமிழர் விடுதலையும்



“உங்கள் போராட்டத்தின் பலன்களை சுயநல வாதிகளை திருடிக்கொள்ள விட்டு விடாதீர்கள், நமக்குள்ளிருக்கும் சாதி, மதம் போன்ற வேறுபாடு களை எரித்துக்கொள்ள இது தான் தருணம்.... உண்ணாவிரதப் போராட்டத்தையெல்லாம் தூக்கி யெறிந்துவிட்டு களம் காணுங்கள். என் உடலை காவல்துறை அடக்கம் செய்துவிட முயலும், விடா தீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதை புதைக் காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போரா ட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள்.” என்று தமிழீழ இனப்போராட்டத்திற்கு தன்னுடலை தழலுக்கு இரையாக்கும் முன் ஓர் கடிதத்தை எழுதி பரப்புரை செய்து மடிந்தான் தழல் ஈகி முத்துக்குமார்.

அவனது மரணக்குறிப்பு, குறிப்பாக தமிழ் நாட்டு தமிழீழ அரசியலில் ஓர் புதிய அத்தியா யத்தை தொடக்கி வைத்தது.

தமிழீழத்தில் தாய்த்தமிழ் உறவுகள் கொத்துக் கொத்தாக கொலையுண்ட தருணம், பன்னாட்டுச் சமூகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது, தமிழகத்தில் தமிழீழ உணர்வாளர்கள் 20இற்கும் மேற்பட்டோர் தமது உடலை தீக்கு இரையாக்கி தொப்புள் கொடி தமிழர்களுக்காக உயிரீகம் செய்தனர்.

இந்நிலையில்தான் முத்துக்குமாரின் மரண சாசனம் பலரை உலுக்கி எடுத்த அதே வேளையில், முத்துக்குமார் நெருப்பு வழியில் தமது தேகத்தை ஆயுதமாக்கி நெருப்பில் இறங்கினாள் காஞ்சி செங்கொடி!

“தோழர் முத்துக்குமாரின் உடல் தமிழக த்தை எழுப்பியது போல் என்னுடைய உடல் மூன்று தமிழர்களின் உயிரைக் காப்பாற்ற பயன்படும் என்ற நம்பிக்கையுடன் செல்கிறேன்” -இப்படிக்கு தோழர் செங்கொடி என்று முத்துக்குமாரை போல் கடிதம் எழுதி வைத்துவிட்டு நீதிமன்றம் மூன்று தமிழர் தூக்குத் தண்டனையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து மாண்டாள்! அவள் நெருப்பில் வெந்ததின் விளைவாகத்தான் பிறகு மூன்று தமிழர் தூக்கு தண்டனை நீக்கப்பட்டதென்பது வரலாறு!




ஒரு தாய் தன் மகனின் உயிர்காக்க போரா டுவதில் எந்தவித ஆச்சரியமும் இல்லைதான். ஆனால் யாரென்றே தெரியாத ஒரு இருபத்தியொரு வயது இளம் பெண், மூன்று பேரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்யக் கோரி தன் உயிரை தீக்கு இரையாக கொடுத்த அதிசயம் இந்தத் தமிழ் மண்ணில் தமிழர்களுக்காக நடந்தேறியது.

2011 ஒகஸ்ட் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காஞ்சிபுரம் தாலுகா அலுவலகத்தில் தன்னை தீக் கிரையாக்கிக் கொண்டார் செங்கொடி. அவர் பழங் குடியினர் சமூகத்தை சார்ந்தவர். பழங்குடியினர் எப்போதும் தற்கொலை என்பதை அறியாதவர்கள். இயற்கையோடு இயைந்து வாழப் பழகியவர்கள். அப்படிப்பட்ட தோழர் செங்கொடி மனத்தை இரு ம்பாக்கி தமது தமிழின இலட்சியத்திற்காக தன்னு யிரை கொடையாக கொடுத்தார்.

தமிழ்ச் சமூகம் எப்போதும் தம் உயிரை ஆயுதமாக்கிப் போராடும் என்பது வரலாறு. ஆங்கி லேயர்களை எதிர்த்து விடுதலைக்கு களமாடிய வீரத்தமிழிச்சி குயிலி முதன் முதலில் தன்னுடைய

**கவிபாஸ்கர்**

உடலில் நெருப்பைக் கட்டிக் கொண்டு ஆங்கி லேய பீரங்கிக் கிடங்குகளை தகர்த்தார். அந்த வர லாற்று வழியில் தமிழீழத்தில் தலைவர் பெண் கரும்புலிகளை உருவாக்கி தன் உடலை நெருப் பாக்கி எதிரிகளை எரிக்க கரும்புலிப்படை அமை த்து வழிகாட்டினார். அந்த வழியில் வரலாற்று வழித்தடங்களை படித்தவர்கள்தான் தோழர் முத்து க்குமாரும், காஞ்சி செங்கொடியும் என்பது நமக்கு உணர்த்துகிறது!

தோழர் செங்கொடி திடீரென போராட வந்தவள் இல்லை. தமிழீழத்திற்காகவும் – தமிழக உரிமைகளுக்காகவும் தொடர் போராட்டங்களில் பங்கெடுத்தவர். காஞ்சி மக்கள் மன்றம் என்ற அறப்போராட்ட அமைப்பு அவளை அரணாக காத்து நின்றது. தோழர் செங்கொடி பழங்குடியின இருளர்கள் உள்பட ஒடுக்கப்பட்ட சமூகத்திற்காக பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்ற களப் போராளி. இசை, நாட்டியம், பாடல் என பன்முக திறமையின் வழியாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியவள்!

மூன்றாம் வகுப்பு மட்டுமே படித்த செங் கொடி, லெனின், சேகுவாரா, பிரபாகரன், பெரியார் அம்பேத்கர் உள்பட பல தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்தும் பல்வேறு நூல்களை படித் தும் அதன்படியே தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்.

தூக்குக்கயிறை தூக்கிலிட தீக்குளித்தவள் செங்கொடி. அந்த 21 வயதான செங்கொடியின் தற் கொலைக்குப் பின்னால் இருந்தது பலர் நினைத் ததுபோல் வெறும் கோழைத்தனம் அல்ல. அநீதி க்கு எதிராய் கொண்ட பெருங்கோபமும், மூன்று நிரபராதிகளின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்கிற இலட்சியமும் ஆகும்!

கயிறு வாங்கி மேடை போட்டு நாள் குறி த்து உலகிற்கே அறிவித்துத் மூன்று அப்பாவித் தமிழர்களை தூக்குத் தண்டனை என்ற பெயரை பயன்படுத்தி பச்சைப் படுகொலை செய்ய முயற்சி செய்து கொண்டிருந்தது அன்றைய இந்திய அரசு. ராஜிவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்து, கொடூரமாக சித்திரவதை செய்து உளவுத்துறை யினரே எழுதிக் கொண்ட ஒன்றை இம்மூவரின் ஒப்பு தல் வாக்குமூலம் என்று சொல்லி, வேறு எந்த அடி ப்படை ஆதாரங்களும் இல் லாமல் நீதியின் பெயரால் ஒரு அநீதி வழங்கப்பட்டு, மூன்று தமிழர்கள் 25 ஆண் டுகளை கடந்தும் தூக்கு க்கயிற்றுக்குக் கீழே தனி மைச் சிறைக் கொட்டடி யில் தங்கள் வாழ்நாளைக் கழித்த பின்னும் குரல் வளையில் கயிறை போட நாள் பார்த்துக் கொண்டி ருந்தது இந்திய ஏகாதிபத் திய அரசு. தமிழர் ஆரிய பகை அரசான இந்திய அரசு பேரின வாத சிங்கள அரசுடன் கை கோத்து 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப்படுகொ லையில் ஒன்ற ரை இலட்சம் தமிழர்களை கொத்துக்கொத் தாக கொன்றொழித்த தனது இரத்த வெறி அடங் காமல் முருகன், சாந்தன், பேரறிவாளனைத் தூக்கி லிட நாள் குறித்தது.

### அந்த தமிழின பகை வெறியை நெருப்பால் பொசுக்கி கயிற்றை எரித்தாள் தோழர் செங்கொடி!

தனது போர்க்குணமிக்க போராட்ட வாழ் க்கையை ஆண்டாண்டு காலமாய்க் கொத்தடிமை களாய் இருக்கும் இருளர் மக்களை மீட்டெடுத்து, சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத் தில் கலந்து கொண்டு, பெண்கள் விடுதலைக்கான




போராட்டத்திலும் தம்மை இணைத்து தமிழர் களை விடுதலைப் போராட்டத்திற்கு அறைகூவி அழைத்த செங்கொடி தமிழக மண்ணில் தன் னையே விதையாக விழுத்தி ஒன்பது ஆண்டுகள் ஆகின்றன.

முத்துக்குமார் – காஞ்சி செங்கொடியின் உயிர்த்தியாகம் நமக்கு இலட்சியத்தை, ஈகத்தை நெஞ்சில் சுமக்க வைத்திருக்கிறது. அவர்களின் மரண வழியை நாம் பின்பற்ற வேண்டியதில்லை. ஆனால் அவர்கள் எதற்காக மரணமடைந்தார்கள் என்ற கொள்கையை நமக்குள் ஏந்திக் கொள்ள வேண்டும். அந்த கொள்கை இலட்சியம் வெல்லும் வரை நாம் போராட வேண்டும். மூன்று தமிழர் உயிரைக்காக்க தீக்குளித்து வென்றாள் செங்கொடி. 25 ஆண்டுகள் கடந்தும் சிறைக் கொட்டடியில் தவிக்கும் ஏழு தமிழர்களின் விடுதலையை சட்ட வழிகள் திறந்து இருந்தும் திறக்க மறுக்கிறது இந் திய அரசு. காரணம் தமிழினப்பகை தனது இனப் பகையை அப்பட்டமாக நுண்ணரசியலாக வெளிப் படுத்துகிறது. நாம் விழித்துக் கொள்ள வேண்டும். தொடர் மக்கள், திரள் போராட்டங்கள் வழியாக மீண்டும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். நூற்றாண்டு காலமாய் இன உரிமைக்காக களமாடி யது; களமாடுகிறது தமிழ்ச் சமூகம். அதனால்தான் தமிழீழ ‘மாவீரர்கள்’ திலீபன், முத்துக்குமார் வரி சையில் தோழர் செங்கொடி தமது உயிரை ஆயுத மாக ஏந்தி, மக்களை ஒருங்கிணைத்தாள்.

அறப்போராளிகள் எப்படி சாவுக்கு அஞ் சக் கூடாதோ அது போலவே சாவை தேடியும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ‘ பயங்கரவாதத்துக்கு எதிரான போர் ’ மாலியில் பிரான்சு முன்னெடுத்துள்ள நவகாலனிய நடவடிக்கை

பகுதி 02



மொரிற்றானியாவிலிருந்து தொடங்கி மாலியை ஊடறுத்து அல்ஜீரியா வரை நீளும் 1000 கிலோ மீற்றர்கள் நீளமான மிகப் பிரமாண்டமான ‘ராவோஉடேனி கழிமுகம்’ (Taoudeni Basin) என அழைக்கப்படும் பிரதேசத்தில் இருக்கும் எண்ணெய் வயல்களில் இயங்குகின்ற எண்ணெயைச் சுத்திகரித்து விநியோகிக்கும் நிறுவனங்களின் வலையமைப்புக்களின் பெரும் பகுதியை ‘ரோட்டல்’ (Total) போன்ற சக்தியை உற்பத்தி செய்யும் பாரிய பிரெஞ்சு நிறுவனமே கட்டுப்படுத்துகிறது.

மாலியின் எல்லைப்புறப் பிரதேசமான ‘கிடால்’ (Kidal) பிரதேசத்திலிருந்து பிரித்தெடுக்கப் படும் யுரேனியமே பிரான்சின் 75 வீதமான மின் சக்தியைத் தோற்றுவிக்கும் அணு உலைகளுக்கான முக்கிய எரிபொருளாகப் பயன் படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட இந்த ‘கிடால்’ பிரதேசத்திலே தான் பிரெஞ்சு ஆதரவைக் கொண்ட இராணுவத் துருப்புகளுக்கும் அல்குவைடாவின் படைகளுக்கும் இடையே இஸ்லாமிய மக்ரெக் பகுதியில் மிகவும் கடுமையான போர் நடைபெற்று வருகின்றது.



இத்தருணத்தில் தங்கத்தையும் நாம் மறந்து விட முடியாது. ஆபிரிக்காவில் தங்கத்தை உற்பத்தி செய்யும் மூன்றாவது நாடாக மாலி விளங்குகிறது. றண்ட்கோல்ட் (Randgold) (ஐக்கிய இராச்சியம்), அங்லோ கோல்ட் அஷான்டி (Anglogold Ashanti) (தென்னாபிரிக்கா), பி2 கோல்ட் (B2 Gold) (கனடா), றெசொலியூட் மைனிங் (Resolute Mining) (அவுஸ்திரேலியா), போன்ற பல்தேச நிறுவனங்கள் இப் பிரதேசத்திலே தமது பாரிய செயற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றன.

### போரில் ஈடுபடும் முக்கிய தரப்புகள்

மினுஸ்மா(MINUSMA) என அழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அமைதிக்கான படையின் (UN Multidimensional Integrated Stabilization Mission) ஆதரவில் தங்கியிருக்கும் மாலி நாட்டின் இராணுவம், அத்துடன் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா மற்றும் நட்பு நாடுகளின் மறைவான ஆதரவைக் கொண்டிருக்கும் பிரெஞ்சுப் படைகள் போன்ற பல முக்கிய தரப்புகள் மாலியில் நடைபெறும் போரில் பங்குபற்றுகின்றன.

மிக அண்மைக்காலம் வரை, அஸவாட் விடுதலைக்கான தேசிய அமைப்பு (National Movement for the Liberation of Azawad MNLA) அன்சார் அல் டீன் (Ansar Al Dine – AAD) போன்ற ஆயுதம் தாங்கிய அமைப்புகளுக்கு எதிராக மேற்குறிப்பிட்ட படைகள் போரிட்டுக்கொண்டிருந்தன. ஆனால் தற்போது இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் பாதுகாக்கும் குழு (Jama’a Nusrat ul – Islam wa al – Muslimin – JNIM) என்ற பெயரில் இந்த ஆயுதக் குழுக்கள் ஒன்றிணைந்து போரிட்டு வருகின்றன.

தலிபான்களுக்கும் ‘ஐமான் முகமத் ரபி அல் ஸவஹீரி’ (Ayman Mohammed Rabie al Zawahiri) ஆகியோருக்கும் விசுவாசமான, துவாரெக் சமூகத்தின் மிக பெயர் போன போராளியாக மதிக்கப்படும் மக்ரெப் பிரதேசத்தில் இயங்கும் ‘இயாட் அக் காலி’யை (Iyad Ag Ghali) தலைவனாகக் கொண்ட அல்குவைடாவும் இக்குழுவில் அடங்கும்.

தமிழில் **ஜெயந்திரன்**

இப்பிரதேசத்தில் பலம் மிக்க காலனீய தரப்பாக விளங்கும் பிரான்சுக்கு அமெரிக்காவின் மூன்று மறைமுக தளங்களிலிருந்தும் ஆதரவு கிடைக்கின்றது. ஆபிரிக்காவின் ஏனைய நாடுகளுக்கு உதவுவது போலவே, ‘உதவி’ என்ற பெயரில் இயங்கும் வானொலி ஒலிபரப்பு நிலையங்கள், தீவிரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகள் என்ற வகையில் ‘இதயங்களும் மனங்களும்’ (‘hearts and minds’ programs) எனப் பெயரிடப்பட்ட பல திட்டங்களுக்கு அமெரிக்கா நிதியுதவி வழங்கி வருகிறது.

‘சாதாரண மக்கள் நடுவில் உருமறைத்து வாழும் போராளிகளை தாக்கி அழித்தல்’ என்ற பெயரில் பிரான்சினால் இயக்கப்படும் ஆயுதந்தாங்கிய ஆளில்லா விமானங்களின் தொடர்ச்சியான அச்சுறுத்தலை மாலி மக்கள் எதிர்கொண்டு வருகிறார்கள்.

போரிலே ஈடுபடும் அனைத்துத் தரப்பினர் மீதும் போர்க்குற்றங்களுக்கான குற்றச்சாட்டுக்கள்



சுமத்தப்பட்டிருக்கின்றன. ‘பயங்கரவாதத்துக்கு எதிரான போர்’ என்ற பெயரில் உலகின் பல பாகங்களிலும் தொடரப்பட்டு மிகவும் மோசமான வன்முறைக் குழியினுள் தள்ளப்பட்ட பிரச்சினைகளுள் ஒன்றான இப்பிரச்சினையை விசாரணை செய்ய பக்கச்சார்பற்ற, நம்பகத்தன்மை வாய்ந்த, வெளிப்படையான நீதிப்பொறி முறைகள் எதுவும் இதுவரை உருவாக்கப்படவில்லை.

**மாலி தனது அமைதியான கடந்த காலத்துக்குத் திரும்ப பேச்சுவார்த்தை வழிவகுக்க வேண்டும்.**

பிரெஞ்சு நாட்டின் ஆதரவுடன் மாலியில் மேற்கொள்ளப்படும் இராணுவமயமாக்கலை



எதிர்க்கும் குழுக்கள், இஸ்லாம் மறையை அடிப்படையாகக் கொண்டு ‘இஸ்லாம் சமயத்தை வெறுக்கும் பிரெஞ்சுக் காலனீயவாதிகளை விரட்ட வேண்டும்’ என்ற காலனீயத்துக்கு எதிரான சுலோகங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

இப்பிரதேசத்தில் வெளிநாட்டவர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் துஷ்பிரயோகங்களையும், போர்களையும் அத்துடன் மக்கள் கடுமையான வறுமையாலும் துன்பங்களாலும் அவதிப்படும் வேளையிலும், அந்நாட்டு வளங்களை தொடர்ந்து கொள்ளையிடும் பல்தேசிய நிறுவனங்களின் செயற்பாடுகளையும் பார்க்கும் போது, இப்படிப்பட்ட சுலோகங்களின் பின்னணியைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. இச்செயற்பாடுகளை ஆதரிப்பதோ, ஏற்றுக்கொள்வதோ நோக்கமல்ல. மாறாக, இம் மக்கள் வெளிப்படுத்தும் சீற்றத்தையும் வன்முறையையும் உரிய முறையில் விளங்கிக் கொண்டால் மட்டுமே அமைதியையும் சமத்துவத்தையும் ஏற்படுத்தக் கூடிய சரியான பாதையை வரைய முடியும்.

இஸ்லாம் மறையை மழுங்கடிக்காது, பேரரசர்களான ‘மூசா’ (Musa) மற்றும் போடியோ(Fodio) காலத்தில் இருந்தது போல இஸ்லாம் மறை செழித்து வளர வழிவிடுவதே இந்தப் பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கான திறவுகோலாகும்.

**நன்றி- *TRT World***


**முற்றும்.**

### தமிழ் மக்களின் ...தொடர்ச்சி...

இவற்றிற்கெதிராக செங்கலடி பகுதியில் அப்பகுதி மக்களினால் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட போதிலும், இருவர் கைது செய்யப்பட்டு மக்களின் அந்த போராட்டம் முடிக்கப்பட்டிருந்தும், இந்த வாள்வெட்டுக் குழுக்களை சேர்ந்தவர்கள் இதுவரையில் கைது செய்யப்படவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசிய உணர்வினையும், போராட்ட சிந்தனையினையும், அரசியல் ரீதியான செயற்பாடுகளையும் மழுங்கடிக்கச் செய்யும் வகையில் கச்சிதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் விரிவுபடுத்தப்படும் நிலைமையும் உருவாகலாம். தமிழ் தேசியம் சார்ந்து செயற்படுபவர்கள் இவ்வாறானவர்களினால் கொலை செய்யப்படும் சூழலும் உருவாகலாம். அல்லாது போனால் எதிர்காலத்தில் தமிழர்களின் தற்போதைய போராட்டத்தினை இல்லாமல் செய்து தமிழர்களின் குரல்வளைகள் நசக்கப்படும் நிலைமையும் உருவாகலாம்.



# தென் சூடான்: இழந்து போனவர்களை நினைவுகூருதல்

பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும், இன்னும் காணாமல் போயிருப்பவர்களுக்கும் உண்மையில் என்ன நடந்தது, அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்பதை தென் சூடான் அரசு கட்டாயமாகக் கண்டறிய வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகமும் 'இழந்தவர்களை நினைவுகூரும் அமைப்பும்' இன்று தெரிவித்திருக்கின்றன. ஆகஸ்ட் 30ம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை உலகம் நினைவுகூர்கிறது என் பது குறிப்பிடத்தக்கது.

தென் சூடான் யுத்தம் 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பித்தது. அக்காலப் பகுதியிலிருந்து ஐக்கிய நாடுகள் தாபனமும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தை உள்ளடக்கிய ஏனைய அமைப்புக்களும் போரில் ஈடுபட்டவர்களால் முன்னெடுக்கப்பட்ட சாதாரண அப்பாவிப் பொது மக்களுக்கு எதிரான தாக்குதல்கள், குறிப்பிட்ட தனி நபர்கள் மீதான தாக்குதல்கள், ஆட்கடத்தல்கள், தடுத்து வைத்திருத்தல் போன்ற முக்கிய மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தி வந்திருக்கின்றன. ஆனால் எண்ணிக்கை குறிப்பிட முடியாத பலர் இன்னும் காணாமல் போயிருக்கிறார்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

“தென் சூடானில் எத்தனையோ பேர் திடீரெனக் காணாமல் போயிருக்கிறார்கள். இவர்கள் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும், அல்லது இறந்ததாகக் கருதப்பட வேண்டும்” என்று மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் கிழக்கு ஆபிரிக்க இயக்குநர் ஜெகன் ஹென்றி (Jehanne henry) தெரிவித்தார்.

இவர்களுக்கு உண்மையில் என்ன நடந் தது என்று தெரியாமல் இருப்பதால், இவை தொடர்பாக பொதுமக்கள் நடுவில் அச்சமும் பயங்கரமும் தொற்றிக்கொண்டிருக்கிறது. இன்னும் பலர் காணாமல் போயிருக்கிறார்கள் என்னும் உண்மையை அரசு ஏற்று, அவர்களுக்கு என்ன நடந்தது என் பதை விசாரிக்க ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பதோடு மட்டுமன்றி, இவற்றுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும் வேண்டும்.

'நாம் இழந்து போனவர்களை நினைவுகூருதல்' என்ற பெயரில் தென்சூடானில் 2014 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அமைப்பு, 2013ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து காணாமல் போனவர்களில் 280 பேரின் விபரங்களை ஆவணப்படுத்தியிருக்கிறது. இவர்களில் சிலர் நாட்டின் பாதுகாப்புப் படைகளினால் கடத்தப்பட்டவர்கள் அல்லது தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் என்பதுடன் 'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள்' என்ற வரையறைக்கும் உட்படுகிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை நேர்காணல் செய்து பெறப்பட்ட இந்த எண்ணிக்கை, தென் சூடானில் காணாமல் ஆக்கப்பட்டிருப்பவர்களில் ஒரு மிகச் சிறிய எண்ணிக்கையையே குறிக்கிறது. போர் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 4000இற்கு மேற்பட்டோர் காணாமல் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதோ அல்லது அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்பதோ இதுவரை கண்டறியப்படவில்லை என்று பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் 2019ஆம் ஆண்டு அறிவித்திருந்தது.

பல சந்தர்ப்பங்களில் இராணுவமும் தேசிய பாதுகாப்புச் சேவையுமே (NSS) பலர் காணாமல் ஆக்கப்பட்டதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் எனச்சொல்லப்பட்டது. ஒரு உதாரணத்தை எடுத்துக் கொண்டால், ஒரு பிரபல்யமான சட்டத்தரணியும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான டொங் சாமுவேல் லுவாக் (Dong Samuel Luak) என்பவரும் எதிர்ப்பு அரசியலின் ஒரு உறுப்பினருமான அக்ரி எஸ்போன் இத்ரி (Aggrey Ezbon Idri) என்பவரும் கென்யாவின் தலைநகரான நைரோபியின் வீதிகளிலிருந்து கடத்தப்பட்டார்கள்.

தமிழில் **ஜெயந்திரன்**



தென் சூடானின் தேசிய பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்தவர்களே இவர்கள் கடத்தப்படுவதற்கு காரணமானவர்கள் என்றும், பெரும்பாலும் 2017ம் ஆண்டு ஜனவரி 30ம் திகதி அதே படையைச் சேர்ந்தவர்களால் அவர்கள் கொல்லப்பட்டிருக்கவும் வேண்டும் என்றும் தென் சூடான் போர்க்குற்றங்களை விசாரிக்க ஐக்கிய நாடுகள் தாபனத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு, இரண்டு வருடங்களுக்குப் பின்னர் வெளியிட்ட தமது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

காணாமல் போனோர்கள் தொடர்பாகவோ அல்லது இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பாகவோ தென் சூடான் அரசு இது வரை எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இச்சம்பவம் தொடர்பாக கென்யா காவல்துறை ஒரு விசாரணையை ஆரம்பித்தது. ஆனால் அவ்விசாரணை இதுவரை நிறைவு செய்யப்படவில்லை.

அரசின் சார்பில் செயற்படுபவர்கள் தனி நபர்களை கைது செய்து, தடுத்து வைத்திருக்கும் செயற்பாட்டில் ஈடுபடும் போதும், அல்லது கடத்திய பின்னரோ தடுத்து வைத்திருந்த பின்னரோ அச்செயலை ஏற்றுக்கொள்ள மறுக்கும் போதும் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதையோ அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையோ மறைக்கும் போதும் தான் ஒருவர் 'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்' என்ற வரையறைக்குள் உள்ளடக்கப்படுகின்றார்.

சுதந்திரம், பாதுகாப்பு, சித்திரவதை அல்லது கொடூரமாகவும் மனிதாபிமானமற்ற, கீழ்த்தரமான முறையில் ஒருவர் நடத்தப்படாதிருத்தல் போன்ற அடிப்படை உரிமைகளை மீறுகின்ற வலிந்து காணாமல் ஆக்கப்படுதலை பன்னாட்டுச் சட்டம் தடைசெய்கிறது.

எந்தவொரு தனிநபரும் வலிந்து காணாமல் ஆக்கப்படும் செயற்பாட்டுக்கு உள்ளாக்கப்படக் கூடாது என்று 'வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைவரையும் பாதுகாத்தலுக்கான பன்னாட்டுச் சாசனம்' குறிப்பிடுவதோடு, இரகசியமாகத் தடுத்து வைத்திருக்கும் செயற்பாட்டை முற்றாகத் தடைசெய்கிறது.



எவருக்கும் தெரியாமல் ஒருவரை எழுந்தமானமாகத் தடுத்து வைத்திருத்தல், சித்திரவதை, சட்டத்துக்கு முரணான கொலைகளை உள்ளடக்கின்ற வலிந்து காணாமல் ஆக்கப்படும் செயற்பாடுகளைஊக்குவிக்கக்கூடிய அனைத்துதுஷ்பிரயோகச் செயற்பாடுகளையும் நிறுத்த வேண்டும் என்று இந்த சாசனம் வலியுறுத்துகின்றது. இந்த ஒப்பந்தத்தில் தென் சூடான் ஒப்பம் இடவில்லை என்பது குறிப்பிடப்படவேண்டியதாகும்.

போரிலே ஈடுபடும் தரப்பினர்கள், காணாமல் போனவர்களாக அறிவிக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக தாம் அறிந்த விடயங்கள் அனைத்தையும் குறிப்பிட்டவர்களின் குடும்பங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் பன்னாட்டுச் சட்டம் வலியுறுத்துகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து, குறிப்பிட்ட தனிநபரின் குடும்பம் அவ்விடயம் தொடர்பாக தெளிவான ஒரு முடிவுக்கு வர உதவ வேண்டும் என்றும், இப்படிப்பட்ட செயற்பாடுகள் நடைபெறுவதை போரிலே ஈடுபடும் வெவ்வேறு தரப்புகள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பாதுகாப்புச் சபை 2019ஆம் ஆண்டு ஏற்படுத்திய ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தின் ஊடாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் அனைத்து தரப்புக்களையும் வலியுறுத்தியது.



காணாமல் போனவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்களில் ஒரு சிலர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருக்கலாம். அதே வேளையில் ஏனையவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம், அல்லது வேறு தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம், அல்லது ஆயுதக் குழுவொன்றில் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டிருக்கலாம் அல்லது நாட்டை விட்டுத் தப்பியோடியிருக்கலாம், அல்லது இறந்திருக்கலாம் அல்லது அவர்களுக்கு வேறு ஏதாவது நடந்திருக்கலாம்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தென்சூடான் ... தொடர்ச்சி...

ஆனால் தென் சூடானைப் பொறுத்த வரையில் அரச இராணுவமோ அல்லது அரசை எதிர்க்கும் ஆயுதக் குழுக்களோ, காணாமல் போனோர் பிரச்சினை தொடர்பாக எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை.



சுதந்திரத்துக்காக தென் சூடான் முன்னெடுத்த (2005ம் ஆண்டு நிறைவுபெற்ற) நீண்ட யுத்தத்தில் சூடான் அரசு மேற்கொண்ட துஷ்பிரயோகங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் மத்தியகோட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் நடுவில் மிகவும் கொடூரமான ஒரு தாக்குதலை சூடான் அரசு மேற்கொண்டிருந்தது.

இத்தாக்குதலின்போது ஆகக்குறைந்தது 300 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். மதகுருக்கள், உதவிநிறுவனப் பணியாளர்கள், தென் சூடான் பாதுகாப்புப்படை உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 230 பேர் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்கள். இவ் விடயங்கள் இந்த அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களைப் பொறுத்தவரையில் இன்றும் தாக்கத்தைச் செலுத்துவதை இனங் காணக்கூடியதாக இருப்ப தோடு, இழைக்கப்பட்ட குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை தட்டிக்கழிக்கும் மனப்பாங்கே இங்கு ஊக்கு விக் கப்படுகின்றது.

சூடான் அரசாலும் இராணுவத்தாலும் இழைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் தற்போதைய தென் சூடான் பிரதேசத்தில் தென் சூடான் ஆயுதப் போராளிகளால் இழைக்கப்பட்ட குற்றங்கள் உட்பட்ட அனைத்துக் கடந்தகாலத் துஷ்பிரயோகங்களுக்கும் தென் சூடான் அரசு தீர்வுகாண வேண்டும் என்று மேற்படி அமைப்புக்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றன.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதலிலிருந்து அனைவரையும் பாதுகாப்பது தொடர்பான பன்னாட்டுச் சாசனத்தை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதன் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டு தமது பாதுகாப்புப்படைகளினால் முன்னெடுக்கப்படும் சட்டத்துக்குப் புறம்பான இரகசியமாகத் தடுத்து வைக்கும் செயற்பாடுகளுக்கு முடிவு கட்ட வேண்டும்.

ஏற்கனவே 2015 மற்றும் 2018ஆம் ஆண்டு காலப்பகுதிகளின் அமைதி உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலைமாறுகால நீதிக் குழுக்களை அமைக்க வேண்டும். உண்மை, நல்லிணக்கம், ஆற்றுப்படுத்தல் தொடர்பான ஆணைக்குழு நட்டஈடு மற்றும் பரிகாரங்களுக்கான அதிகாரங்களைக் கொண்டுள்ள குழு, அண்மைக் காலத்தில் நடைபெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்களை விசாரிப்பதற்கான தென் சூடான் மற்றும் ஏனைய ஆபிரிக்க நாட்டவர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு நீதிமன்றம் போன்ற பொறிமுறைகள் மேற்படி அமைதி உடன்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த வன்முறைச்சுழற்சிக்கு ஒரு முடிவைக் கொண்டுவரவும், 2013ஆம் ஆண்டிலிருந்து இழைக்கப்பட்ட குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரணத்தையும் ஆற்றுப்படுத்தலையும் வழங்கவும் மேலே திட்டமிடப்பட்டுள்ள குழுக்களுக்கு ஆற்றல் உண்டு. ஆனால் பல ஆண்டுகளாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதும் இந்த குழுக்களை அமைப்பதில் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

“போரின் காரணமாக கடந்த காலத்திலும் தற்போதும் தொடர்ந்துகொண்டிருக்கும் துஷ்பிர



யோகங்களினால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளில் கவனஞ்செலுத்துவதற்குப் பதிலாக ஆட்சியதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதிலேயே தென் சூடான் தலைவர்கள் குறியாக இருப்பதை அவதானிக்க முடிகிறது” என்று ‘நாங்கள் இழந்தவர்களை நினைவுகூர்தல்’ என்ற அமைப்பின் நிறைவேற்று இயக்குநரான டேஉட் கிடியொன் *(Daud Gideon)* தெரிவித்தார். “வீணாக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற காணாமல் ஆக்கப்பட்டிருக்கும் எண்ணற்ற தனிநபர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதியை வழங்காது இன்னொரு ஆண்டு கடந்துவிடக் கூடாது.”

**நன்றி – *Human Rights Watch***

• • •

## செங்கொடியின் ... தொடர்ச்சி...

போகக் கூடாது. நாம் நமது இலட்சியத்திற்காக இறுதிவரை போராட வேண்டும். தோழர் செங்கொடி நமக்கு தந்துவிட்டு சென்ற இலட்சியத்தை கைவிடாது காக்க வேண்டும். அப்பாவி ஏழுதமிழர்களின் விடுதலைக்கு மீண்டும் நாம் புதிய வடிவத்தில் மக்கள் திரள் போராட்டத்தை ஒருங்கிணைக்க வேண்டும். இதுவே செங்கொடியின் நினைவு நாளில் நாம் எடுக்க வேண்டிய உறுதிமொழியாகும்.

## நடந்ததும், நடப்பதும் ... தொடர்ச்சி...

**• துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்**

இலங்கையின் நீளமான ஆறான மகாவலி கங்கையை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி திருப்பி, பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களுடன்



இணைத்து வடக்கு மாகாணத்தைத் துண்டாடி அதை சிங்களமயமாக்கும் திட்டமாக உருவாக்கப்பட்டது. இத்திட்டம் நிறைவேற்றப்படாமல் தமிழ் மக்களின் போராட்டங்கள் தடுத்து நிறுத்தின. இது தற்போது நடைமுறைப்படுத்தப்படும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களை பலப்படுத்தும் வகையிலும், இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளும் பகுதிகளின் வரலாற்றை திரிபுபடுத்தும் முயற்சிகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழினம் தமது தாய் மண்ணை இழந்து நிற்பதும், புலம்பெயர்ந்து வாழ்வதும், தமது தாய் மண்ணில் சுதந்திரமற்றவர்களாக வாழ்வதுமே இன்றைய நிலையாகும். இந்த நிலை மாற்றப்பட தமிழினம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

**தொடரும் ....**

## வரலாற்று புகழ்மிக்க ... தொடர்ச்சி...

முற்றுமுழுதாக கருங்கல்லால் செதுக்கப்பட்ட கோமுகி ஒன்றினையும் என்னால் அங்கு அவதானிக்க முடிந்தது.

சோழர் காலத்து சிவன் கோயில் என்பதால் அவர்களது கட்டடக்கலையில் கோமுகிக்கு கொடுக்கும் இடம் எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை இது பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

கோவிலின் முன்னால் சதுரவடிவ சுரங்கம் ஒன்றும் உள்ளது. எங்கு சென்று முடிகிறது என தெரியவில்லை. ஆனால் நிலத்துக்குக் கீழே வளைந்து செல்கிறது அதனுள் புற்கள் வளர்ந்துள்ளதால் மேலிருந்து கீழே என்ன இருக்கிறது என பார்க்க முடியவில்லை. எனினும் திருகோணமலை வரை சுரங்கம் செல்வதாக கதையொன்று உள்ளது இதற்கும் சான்றுகள் என்னிடம் இல்லை.

அண்மைய ஆய்வுகளில் இங்கு இங்கு 5 மிக பழமையான கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. 3 கல்வெட்டுகள் கி.பி 10, 11 நூற்றாண்டுக்கு உரியவையும் ,மீதி ரெண்டு 14 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவை எனவும் கருதப்படுகிறது.

சுற்றவர முழுமையாகப் பார்த்துவிட்டு காட்டில் கிடைத்த பூக்களை வைத்து சிவலிங்கத்தை வணங்கி விட்டு ஒரு மணிநேரத்தின் பின் மீண்டும் நீலாப்பொல கிராமம் நோக்கி வந்த வழியே பயணத்தை தொடர்ந்தோம்.

**அடுத்த பயணத்தில் சந்திப்போம்...**

## வருடாந்த பொங்கல் ... தொடர்ச்சி...

பொலிசாரினாலும் நீதிமன்றத்தினாலும் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு குறித்த வழக்கு நிலுவையில் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

தமிழ் மக்களின் தொன்மைகளை அழிக்கும் செயற்திட்டங்களை சிறீலங்கா அரசு முன்னெடுத்து வருகையில் அதனை முறியடிக்கும் வண்ணம் தமிழ் மக்களின் தொன்மையான சான்றுகள், விழாக்களை தமிழ் மக்கள் முன்னின்று மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

## இந்தியாவே சிறீலங்கா ... தொடர்ச்சி...

நாம் இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியவாறு சீனாவை ஆதரிப்போம், பாகிஸ்தானையும் ஆதரிப்போம், ஏனெனில் 2000 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு விடுதலைப்புலிகளின் கைகளில் விழும் நிலையில் இருந்தபோது பாகிஸ்தான் தான் பல்குழல் உந்துகணை செலுத்திகளை வழங்கி எம்மை காப்பாற்றியது.

தனது போர் முனைகளில் இருந்த ஆயுதங்களை அவசரமாக அகற்றி விமானம் மூலம் எமக்கு விநியோகித்திருந்தது. அது தான் யாழ். குடா நாட்டை தக்கவைத்தது. அது போற்றத்தக்கது. எனவே நாம் எல்லா நாடுகளுடனும் நட்பாக இருக்க முயற்சி செய்வோம் என தெரிவித்துள்ளார்.